NETRIKKAN

நெற்றிக்கண்

உண்மைகளின் விதைகுழி-பொய்மைகளின் புதைகுழி

நெற்றிக்கண் மெய்களின் விதைகுழி பொய்களின் புதைகுழி

Netrikkan-Registered Non Profit Inc. | மாசி-26-2013 - இதழ் -4 | இலவச மாத இதழ்

விண்தொடு வீரம்! மண்படா மானம்!

நாம் தமிழர் கனடா Naam Thamilar Canada

Working to Build a Brighter Tamil Community

நாம் தமிழர் கனடாவின் 2ம் ஆண்டு நிறைவு விழா!

விடிமுழக்கம் இரண்டு!

விடியலை எம் விழி தீண்டும் வரை எம் அணுக்களில் விடிமுழக்கம் ஓய்ந்திடாது!

சிறப்பு விருந்தினர்கள் தமிழகத்தில் இருந்து வருகை தருகின்றார்கள்

சிறப்புரைகள்

தமிழகத்தில் இருந்து வருகைதர இருக்கும்
இன உணர்வாளர்களின் சிறப்புரைகள்!
கனேடிய அரசியற் கட்சிப் பிரமுகர்களின் சிறப்புரைகள்!
முக்கிய தமிழ்ப் பிரமுகர்களின் சிறப்புரைகள்!

நடனம்

சிறந்த நடன ஆசிரியரும்
பரத நாட்டிய வித்தகியுமாகிய
திருமதி. அற்புதராணி கிருபராஜ்
அவர்களின் மாணவிகள்

எழுச்சி நடனம்

சிறந்த நடன ஆசிரியரும்
நாட்டிய வித்தகியுமாகிய
செல்வி நிவேதிகா இராமலிங்கம்
அவர்களும் அவர்தம் மாணவிகளும்

இசை நிகழ்ச்சி

இரண்டு தசாப்த காலமாக கனேடிய
இசை உலகினில்
வெற்றிக்கொடி கட்டிப்பறக்கும்

அக்னி

இசைக்குழுவினரின்

விடுதலைப் பிழம்பு

முற்றிலும் புதிய பரிணாமமாக
எழுச்சிப்பாடல்களோடும், புரட்சிப் பாடல்களோடும்
அக்னி இசைக்குழுவினரின் புதிய தடம் இது!

2013 MARCH 16 5 PM

Rembrandt Banquet Hall
930 PROGRESS AVE
SCARBOROUGH, ON.
(MARKHAM RD & 401)



உறவுகட்காய் உறவுகளோடும் உறவுகளின் சங்கமம்

தங்கள் வரவு நல்வரவாகுக - நாம் தமிழர் கனடா

அனுமதி முற்றிலும் இலவசம்

சண்: 416-876-0923
சேதுபவா: 416-917-8951
ராஜா: 416-400-5993
சிவதாஸன்: 647-859-6574

ஊடக அனுசரணை: நெற்றிக்கண் | cmr | tvi | tamil one | 105.9 FM

நாம் தமிழராய் ஒன்றிணைவோம்! நமக்கான விடுதலைதனையும் நாமே வென்றெடுப்போம்

திறம் குன்றா மறத்தமிழர் மான ஏடு **நெற்றிக்கண்**

NTC Naam Thamilar Canada

இணையம் ஒன்றின் புதிய உதயம்: www.naamthamilar.ca

எமது பார்வையில்....! எமது பார்வை பகுதியினை இவ்வாறம் இச்செய்தி அலங்கரிக்கின்றது

முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைப்பதுபோல்........

சோ.சுகிர்தன்



மீளக்குடியமர வேண்டியோரின் விவரங்கள் தன்னிடம் இல்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கூறுவது, "முழுப் பூசனிக்காயைச் சோற்றினுள் மறைப்பதற்கு ஒப்பானது.இவ்வாறு வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலாளரால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் மீள்குடியமர்த்தப் பட வேண்டியவர்கள் தொடர்பான சகல விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது : வலி. வடக்குப் பிரதேசத்தில் இன்னமும் விடுவிக்கப் பட வேண்டிய பிரதேசங்கள் (24 கிராம அலுவலர் பிரிவுகள்), மீளக்குடியமர்த்தப்பட வேண்டிய மக்கள் தொடர்பாகப் புள்ளி விவரங்களுடன் 11.09.2012 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி மீளக்குடியமர்ந்தோர் (2 ஆயிரத்து 140 குடும்பங்கள்), அடிப்படை வசதியின்மையால் மீளக் குடியமராதோர் (4 ஆயிரத்து 562 குடும்பங்கள்), மீளக் குடியமர வேண்டியோர் (6 ஆயிரத்து 496 குடும்பங்கள்) விவரங்கள் மற்றும் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள், பகுதியாக அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் என்பனவும் பிரதேச செயலாளரால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் வலி. வடக்குப் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு தற்போது வலி.வடக்கு பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் (288 குடும்பங்கள்), வேறு பிரதேச செயலாளர் பிரிவில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் (1,268 குடும்பங்கள்) எண்ணிக்கையும் புள்ளிவிவரரீதியாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் குறித்த சரியான தகவல் இல்லை என்று அரச அதிபர் தெரிவித்திருப்பதும், ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற விசேட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் மேற்படி தகவல்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு அரச அதிபர் கொண்டுவராததும் எமக்கு மனவருத்தத்தை அளிக்கின்றது. அரச அதிபரின் இந்தக் கூற்றானது "முழுப் பூசனிக் காயைச் சோற்றினுள் மறைப்பது' போன்ற செயலாக உள்ளது. எனவே உண்மை நிலையை உணர்ந்து மீள்குடியமர்விற்கு உதவிக்கரம் நீட்டுமாறு வலி. வடக்கு மக்களின் மக்களின் சார்பில் கேட்கிறோம். என்றுள்ளது.

நெற்றிக்கண்

ஆசிரியர் குழு: டெல்ரா கணா, அருண் - ரி, நிலவன்

நிர்வாகம்: ச.க. வேல், புங்கை ராஜா

விளம்பர தொடர்பாளர்: புங்கை ராஜா, தாசன் .சி

வரைகலை - வடிவமைப்பு: பரடைஸ் பிரின்ட், கொலம்பியா பிரின்ரர்ஸ், சுதா -சஜீ கிராபிக்ஸ்

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 647 272-7434
தொலைநகல்: 416 781-5365

நெற்றிக்கண் பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பானவர்கள். நெற்றிக்கண் எந்த வகையிலும் பொறுப்பேர்க்காது. அத்துடன் இதில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்க்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் குழுவோ இப் பத்திரிகையோ அல்ல.

வெளியிடுபவர்: நெற்றிக்கண் மீடியா நிறுவனம்

தாயகச் செய்திகள்

இலங்கை அரசின் போர்க்குற்றம்



புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்பாக இராணுவப் பதுங்குகுழி போன்று காட்சியளிக்கும் ஓர் இடத்தில் பிஸ்கட் சாப்பிடும் படத்தை வெளியிட்ட சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம், இலங்கை அரசைத் தண்டிக்கத் தவறிய ஐ.நாவுக்கு தற்போது அதற்கான சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது என்றும் இதை ஐ.நா. சரியாகப்பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. பாலச்சந்திரன் குறித்த போர்க்குற்ற ஆதாரம் மட்டுமன்றி இன்னும் அதிர வைக்கும் பல ஆதாரங்கள் தம்மிடம் இருக்கின்றன என்றும் சனல் 4 அதிரடியாக அறிவித்துள்ளது. சனல் 4 ஆவணப்பட இயக்குனர் கல்லும் மெக்ரே, தமிழக தொலைக்காட்சி ஒன்றிற்கு பிரிட்டனிலிருந்து வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசைத் தண்டிக்க ஐ.நா. தவறியுள்ளது. ஆனால், இப்பொழுது அதற்கான சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இதை ஐ.நா. சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அடுத்தமாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ள நிலையில், சனல் 4 வெளியிட்ட புகைப்படங்கள் உலகம் எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை, சனல் 4 தொலைக்காட்சி போர் தவிர்ப்பு வலயம் என்ற ஆவணத்தை இந்தக் கூட்டத்தைத் தொடரை முன்னிட்டு வெளியிடவுள்ளது. இதுதொடர்பில் மேலும் மெக்ரே தெரிவித்திருப்பவை வருமாறு போர்வெற்றிகளுக்கு தாங்கள்தான் காரணம் என்று கூறுபவர்கள்தான் போர்க்குற்றத்ததையும் பொறுப்பேற்க வேண்டும். இந்தப் போர் குற்றத்தை தட்டிக்கேட்டகத் தவறினால் எதிர்காலத் தலைமுறை இதற்காக மீண்டும் புரட்சியில் இறங்கலாம்.

அதனால் இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்காக இப்பொழுதே இதை தட்டிக்கேட்க வேண்டியது அவசியம். இராணுவம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டிருந்தால் இராணுவத் தரப்புத்தான் பொறுப்பு. ஜனாதிபதி முப்படைத்தளபதி. அவரது சகோதரர் கோட்டாபய இராணுவச் செயலாளர். எனவே, இந்த குற்றங்களுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்பு வகிக்கின்றார் என்றார் மெக்ரே. இவ்வாறான போர்க்குற்றச்சாட்டுக்களை போலியானவை என்றும் மேற்குல சதி என்றும் இலங்கை கூறுகிறதே என்பதற்கு பதில் அளித்த மெக்ரே, இவை உண்மையானவை என்பதற்கான ஆதாரங்களை உறுதிசெய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் இலங்கையின் இறைமையில் தலையிடக்கூடாது என்று இலங்கை சொல்வது குறித்துக் கேட்டபோது, ஐ.நாவில் இலங்கை உட்பட பல நாடுகள் இணைந்து தம் மக்களைப் பாதுகாக்க ஒப்பந்தம் செய்துள்ளது. எனவே, எந்த நாடு குற்றங்களை பொதுமக்களுக்கு எதிராகச் செய்தாலும் அதைக்குறித்து கேட்க ஐ.நாவுக்கு முழு உரிமை இருக்கிறது என்றார். "பிரிட்டன், அமெரிக்கா இழைத்த போர்க்குற்றங்களுக்கு எதிராக நான் படம் தயாரித்திருக்கிறன். யாராக இருந்தாலும் போர்க்குற்றங்களுக்கு எதிராக நான் படம் தயாரித்திருக்கிறன். என்மீது குற்றம் சாட்டி அல்லது போலியான படங்கள் என்று குற்றம் சாட்டி இலங்கை தப்பிக்க முனைகிறது" என்றும் அவர் தெரிவித்தார். இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு எதிரான பிரேரரணையை கொண்டுவரும் நடவடிக்கையில் இந்தியாவின் பங்கு முக்கியமானது என்றும் கடந்த ஆண்டு கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா நீர்த்துப்போகத் செய்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது என்றும் கல்லும் மெக்ரே தெரிவித்தார்.

வட, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்கக் கோரி மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டை



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சியை நீக்கக் கோரி சமஉரிமை இயக்கத்தினால் மட்டக்களப்பு நகரில் இன்று கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.



இந்நிகழ்வு, மட்டக்களப்பு நகரிலுள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது. இதில் தமிழ், முஸ்லிம் மக்கள் பலரும் கையெழுத்திட்டனர். வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்க வேண்டும். கைதுகள், கடத்தல்கள் உடன் நிறுத்தப்படல் வேண்டும். அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வுரிமையை பறிக்கக் கூடாது போன்ற கோரிக்கைகள் எழுதப்பட்ட நீளமான பதாகையில் இந்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன. இந்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கை கொழும்பு மற்றும் காலி, கண்டி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளதாகவும் பொதுமக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருவதாகவும் சமஉரிமை இயக்கத்தின் இணை ஏற்பாட்டாளர் நிச்சட் தெரிவித்தார்.



இந்த மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. வின் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. ஐரோப்பிய யூனியனின் இந்த முடிவை இராஜதந்திர வட்டாரங்களும் உறுதி செய்துள்ளன. ஐரோப்பிய யூனியனின் இந்த முடிவால் இலங்கை அரச தரப்பு மத்தியில் பெரும் அதிர்வலைகள் கிளம்பத் தொடங்கியுள்ளன. ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகி 4 கட்டங்களாக மார்ச் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரின் போது அமெரிக்காவினால், இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை இலங்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசத்தை வழங்கியிருந்தது. எனினும் அந்த சந்தர்ப்பத்தை இலங்கை உரிய முறையில் பயன்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளது அமெரிக்கா. இந்தநிலையில் அமெரிக்கா தற்போது கொண்டுவரவுள்ள பிரேரணை இலங்கை மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் அமையவுள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்பாக கடந்த 11 ஆம் திகதி ஐ.நா பொதுச்சபைக்கு அனுப்பிய விடயங்களை உள்ளடக்கியதாகவே புதிய பிரேரணை அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணைக்கான முழுமையான ஆதரவை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கத் தீர்மானித்துள்ளது. கடந்தமுறை அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை 9 மேலதிக வாக்குகளால் ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 27 நாடுகளில் 9 நாடுகள் இந்தமுறை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் தகுதியைக் கொண்டுள்ளன. ஒஸ்திரியா, செக்குடியரசு, ஈஸ்ரோனியா, ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, போலண்ட், ருமேனியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளே மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கும் தகுதியுடைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாகும்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு திரும்பிய பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பேர்ட், அமெரிக்காவின் புதிய பிரேரணையை பிரிட்டனும் ஆதரிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். ஐ.நா மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் வாக்குரிமையை இழந்திருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் முடிவெடுக்கும் அதிகாரம்மிக்க நாடுகளில் ஒன்றாகவே அது காணப்படுகின்றது. இதனடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளில் 20இக்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை எடுத்துவிட்டன என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுக்கு அமைய ஐ.நா மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கும் தகுதியுடைய 9 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க தீர்மானித்துள்ளன. எனினும் இந்தத் தீர்மானத்தைக் கடைசித் தருணம் வரை இரகசியமாக வைத்திருக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கடந்த ஆண்டு அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை எதிர்த்து வாக்களித்து இலங்கைக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்த சீனா, ரஷ்யா, பங்களாதேஷ், கியூபா, ஜோர்தான், சவூதி அரேபியா போன்ற நாடுகள் இந்த முறை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளன. இதனால் அமெரிக்காவால் இந்த ஆண்டு கொண்டுவரப்படும் இலங்கைக்கு எதிரான காட்டமான பிரேரணை நிச்சயமாக நிறைவேறும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில், விழிப்புலனற்ற மாணவன் ஒருவர் 8 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்றுவரும் விஜயகுமார் விஜயலாதன் என்ற மாணவனே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். இன்று காலை 6 மணிக்கு சுன்னாகம் மருதனார்மடத்தில் இருந்து தெல்லிப்பழை வரையான 8 கிலோ மீற்றர் தூரத்தை இவர் எந்தவித தடையும் இன்றி தனது கண்களை கறுப்பு துணியால் கட்டியவாறு ஓடி முடித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு வன்னியில் நடைபெற்ற யுத்தத்தினால் தனது பார்வையை இழந்த இந்த மாணவன், சுன்னாகம் வாழ்வகத்தில் கல்விகற்று வருகிறார். இவர் அந்தப்போட்டியில் பெருவிருப்போடு பங்குபற்றி ஏனைய மாணவர்களுக்கு தான் சளைத்தவன் இல்லை என்ற வகையில் இவர் தனது சாதனையினை நிலைநாட்டியள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
Tamil National People's Front
No.43, 3rd Cross Street, Jaffna Established:- 20-02-2010

தாயகச் செய்திகள்

21-02-2013

பாலச்சந்திரன் கொலைக்குக் கண்டனம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருடைய மகன் பாலச்சந்திரன் அவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இப்படங்கள் பாலச்சந்திரன் மோதல் நடைபெற்றபோது இடையில் சிக்கி இறக்கவில்லை என்பதனையும் மாறாக சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னரே சுட்டுக் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரன் போராளியல்ல அவர் ஒரு பொது மகன் என்பது உலகம் அறிந்த விடயம்.

கைதியாக உள்ள ஒரு போராளியைக் கொல்வதே சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு மோசமான குற்றமாக இருக்கும் நிலையில், தாம் கைது செய்து வைத்திருந்த பொது மகனை அதுவும் 12வயது சிறுவனை கொலை செய்துள்ளனர். இது மிக மோசமான யுத்தக்குற்றமாகும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சனல் 4 உட்பட பல சர்வதேச மற்றும் உள்ளுர் ஊடகங்களும் இணையத்தளங்களும் பெருமளவு ஆதாரங்களை கடந்த காலத்தில் வெளியிட்டு இலங்கை அரசின் இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியிருந்தன.


இந்நிலையில் சனல் 4 வெளியிட்டுள்ள பாலச்சந்திரனின் படுகொலை ஆதாரங்கள் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொடூரங்களை மேலும் நிருபிக்கும் வலுவான சான்றாகவும் அமைந்துள்ளது. இப்படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள். அது மட்டுமன்றி யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழினத்தை இல்லாது அழிக்கும் நோக்கில் கட்டமைப்புசார்(structural) இன அழிப்பு பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே பாலச்சந்திரனுடைய படுகொலை உட்பட நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கும், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு சார் இனஅழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காமல் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இரண்டு விடயங்களையும் செயற்படுத்துவதற்கும் ஏற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்கும் வகையில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் சிறீலங்கா அரசியல் அமைப்பிற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறான நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பாக குறிப்பாக மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப் படுகெலை தொடர்பாக ஓர் முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை நடாத்துவதற்குத் தேவையான சாட்சியங்களைத் திரட்டுவதற்குமுரிய பாதுகாப்பான சூழலை உருவாக்க முடியும். அத்துடன் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற கட்டமைப்பு சார் இனஅழிப்பையும் தடுக்க முடியும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர்

செ.கஜேந்திரன்
பொதுச் செயலாளர்



கஜேசந்திரகுமார் கண்டனம்


எங்கள் உறவினர்கள் எங்கே?



2009ம் ஆண்டு இறுதி யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் இராணுவத்தினரிடம் நாங்கள் ஒப்படைத்த எங்கள் உறவினர்கள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதையாவது வெளிப்படுத்தச்சொல்லுங்கள் என கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பொது எதிரணியினர் முன்னிலையில் மக்கள் உருக்கமான வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர். சனிக்கிழமை காலை கிளிநொச்சியிலுள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகம் (அறிவகம்) சென்றிருந்த பொது எதிரணியினர் அங்கு கூடியிருந்த சுமார் நூற்றுக்கணக்கான காணாமல்போனவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே மக்கள் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர். 'முள்ளிவாய்க்காலில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் முல்லைத்தீவு, ஓமந்தை பகுதிகளில் வைத்து இராணுவத்தினரிடம் எங்கள் பிள்ளைகளை, கணவன், மனைவியை, பிள்ளைகளை ஒப்படைத்தோம். ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரையில் தெரியவில்லை, இராணுவத்தினர் தமக்கு எதுவும் தெரியாது எனக்கூறுகின்றனர். அரசாங்கம் அப்படி யாரையும் இராணுவம் பொறுப்பேற்க வில்லை எனக்கூறுகின்றது. அப்படியாயின் எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் பிள்ளைகளுடன் சிறுவர்கள், சிறுமியர்களையும் கூட்டிச் சென்றார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது? உறவுகளை தொலைத்துவிட்டு, மனநோயாளிகளாக, வறியவர்களாக, நோயாளிகளாக மாறியிருக்கின்றோம் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கூறுங்கள்' என கண்ணீர் மல்க தங்கள் உறவுகளின் புகைப்படங்களுடனும், புகைப்படப் பிரதிகளுடனும் மக்கள் கண்ணீர் மல்கினர்.

இந்நிலையில் குறித்த சந்திப்பு கடுமையான மன உளைச்சலை தமக்கு ஏற்படுத்தியிருப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் அலுவலகத்தில் இடம்பெற்ற இன்றைய சந்திப்பு மிகவும் பெறுமதிவாய்ந்த ஒன்று என்றும் பொது எதிரணியினர் இன்று மாலை நடைபெற்றிருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளதுடன், அந்த மக்களின் கண்ணீருக்கும், இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்குச் செய்திருக்கும் அநீதிகளுக்கும் நிச்சயமாக பதில் சொல்லியாகும் நிலை உருவாக்கப்படும் என்றும் கூறியுள்ள பொது எதிரணியினர், விடயம் தொடர்பில் பாராளுமன்றிலும், சர்வதேச ஜனநாயக அமைப்புக்களிடமும் தெரியப்படுத்துவோம் என உறுதியளித்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் முஸ்லீம் பிரிவு?



தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் முஸ்லிம் பிரிவு உருவாக்கப்பட்ட வேண்டும் என ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரான சி.வே விக்னேஸ்வரன் தெரிவித்தார். முஸ்லிம் கட்சிகளை தொடர்ந்து நம்பியிருக்காது தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் முஸ்லிம் பிரிவு உருவாக்கப்பட்ட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். முன்னாள் கல்முனை மேயரும் செனட்டருமான மசூர் மௌலானவின் அகவை என்பது நிறைவு விழா கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் தலைமையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அதற்கான கொள்கை திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் பெறவேண்டியவற்றை இலகுவாக பெறமுடியும். இந்த இரண்டு சிறுபான்மை இனங்களும் இணைந்து செயற்படுவதன் மூலமே இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒரே வழியாகும். கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டது.

நாட்டின் பிரஜை என்ற வகையில் இதற்காக கவலைப்பட்டேன். நாங்கள் மாணவர்களாக இருந்தபோது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வரவேற்கின்றோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எனும் பெயரின் மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை இந்த கட்சியில் ஒன்றிணைக்க முடியும். தமிழ்த் தேசியமும் முஸ்லிம் தேசியமும் ஒண்றினைந்து செயற்பட நான் ஆவணம் செய்கின்றேன். முஸ்லிம்களில் பல்துறை சார்ந்தவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் அஷ்ரப் எவ்வாறு அன்று எப்படி நுழைத்துக்கொண்டாரோ அப்படி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுள் முஸ்லிம்களையும் உள்வாங்க வேண்டும். முஸ்லிம்களின் அபிலாஷைகளை தமிழ் தலைவர்கள் உள்வாங்க வேண்டும். அதற்கு ஏற்ப செயற்பட வேண்டும். ஒரே தமிழ், முஸ்லிம் தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும். தமிழ் பேசும் மக்களின் உரிமை போராட்டங்களை வலுவாக முன்னெடுக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் போட்டி அரசியல் நடத்துவதற்கான காலம் இதுவல்ல. தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளும் இதை கவனத்திற்கொள்ள வேண்டும். சோரம் போகும் தமிழ் தலைமையினை உண்மையுள்ள முஸ்லிம்கள் ஒருபோதும் வரவேற்கமாட்டார்கள். ஆனால் நேர்மையான தமிழ் தலைமைத்துவத்தை உண்மையுள்ள முஸ்லிம்கள் எப்போதும் வரவேற்பார்கள்' என்றார்.

85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள் அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

அதுவும் மிகக் குறைந்த விலையில்.



Life
Universal Life
Whole Life
Term Life

RESP
+
20% Government Grant
15% Company Bonus

RRSP
Loan Approved
Even SIN Number 9

Critical Illness
Upto 25 Illness



Insurance Broker

Guna Selliah

416.371.7776

Assumption Life

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

தமிழகச் செய்திகள்

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனை தமிழகத்திற்கு அழைத்து வந்த ஜனார்த்தனம் காலமானார்



உலகளவில் தமிழர்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்டவரும், குறிப்பிடத்தகுந்த தமிழ் ஆர்வலருமான டி.ஆர் ஜனார்த்தனம் நேற்று(20.2.13) சென்னையில் காலமானர். 75 வயதான அவர் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். தமிழுக்காக பல்வேறு தளங்களில் அவர் பணியாற்றி வந்தார். கடந்த 1965ம் ஆண்டு ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் பங்கு பெற்ற அவர், திமுக நிறுவனர் அண்ணாதுரையின் நாடகங்கள் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிராபகரன் உள்ளிட்ட பலரை தமிழகத்துக்கு முதல் முறையாக அழைத்து வந்தவர் ஜனார்த்தனம் அவர்கள்தான் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

பார்வதியம்மா நினைவு நாள்



பார்வதியம்மாளின் நினைவு நாளையொட்டி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகமான தாயகத்தில், அவரது திருஉருவப் படத்திற்கு கழகத்தின் சட்டத்துறைச் செயலாளரும், உயர்நிலைக்குழு உறுப்பினருமான ஜி.தேவதா மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உயர்நிலைக்குழு உறுப்பினர் இமயம் ஜெபராஜ், மாநில மகளிர் அணிச் செயலாளர் குமரி விஜயகுமார், பகுதிச் செயலாளர்கள் தி. நகர் பீடா இரவி, சேப்பாக்கம் மார்க்கெட் சேகர், எழும்பூர் தென்றல் நிசார், ஆயிரம்விளக்கு ரெட்சன் அம்பிகாபதி மற்றும் தேவராஜ், ஜார்ஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

'தாயகம்' தலைமைக் கழகம் - சென்னை-8 மறுமலர்ச்சி தி.மு.க.

இலங்கை நடுவருக்கு எதிராக போராட்டம்



சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பங்கேற்ற இலங்கை நடுவருக்கு எதிராக முற்றுகை போராட்டம் நடத்திய தந்தை பெரியார் தி.க.வினர் மற்றும் நாம் தமிழர் கட்சியினர் கைது செய்யப்பட்டனர். இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி சென்னையில் நேற்று தொடங்கியது. இதில் சர்வதேச நடுவராக இலங்கையைச் சேர்ந்த குமார தர்மசேனா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சென்னை போட்டியில் நடுவராக செயல்பட்டு வருகிறார். இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு நடந்த போரின்போது, ஈழத்தமிழர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்திய இலங்கை ராணுவத்திற்கு எதிரான போர்க்குற்றங்ள் குறித்த புதிய ஆதாரங்களை சேனல் 4 தொலைக்காட்சி அம்பலப்படுத்தி உள்ளதை தொடர்ந்து, இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள் தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது. இதன் ஒருபகுதியாக, இலங்கை நடுவர் குமார தர்ம சேனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியம் வாயில் முன்பு இன்று தந்தை பெரியார் தி.க.வினர் இன்று முற்றுகை போராட்டம் நடத்தினார்கள். வடக்கு மண்டல அமைப்பாளர் கரு.அண்ணாமலை தலைமையில் அங்கு வந்த அவர்கள், ராஜபக்சேவை கண்டித்து முழக்கங்களை எழுப்பினார்கள். அப்போது தாங்கள் கொண்டு வந்த ராஜபக்சே உருவப்படத்தை தீவைத்து எரித்ததோடு, செருப்பாலும் அடித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் விரைந்து வந்து அவர்கள் 33 பேரையும் கைது செய்தனர். இதேப்போன்று நாம் தமிழர் கட்சியினரும் ஏராளமானோர் போராட்டம் நடத்தினர்.அவர்களும் கைது செய்யப்பட்டனர்.


இலங்கைக்கு உதவியதாக சென்னையில் காங்கிரஸ் அலுவலகம் முற்றுகை!



இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போரின்போது, ஈழத்தமிழர்களை கொன்றொழிக்க உத்வியதாக மத்திய காங்கிரஸ் அரசை கண்டித்து, சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழக காங்கிரஸ் அலுவலகமான சத்திய மூர்த்தி பவனை, மே 17 இயக்கத்தினர் இன்று முற்றுகையிட்டனர். அப்போது காங்கிரஸ் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங், அப்போதைய அமைச்சராக பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணன், வெளியுறவுத் துறை செயலர் சிவசங்கர மேனன் உள்ளிட்டோரை கண்டித்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். அண்ணா சாலையிலிருந்து, சத்திய மூர்த்தி பவனை நோக்கி சென்ற அவர்களை போலீசார் தடுத்தி நிறுத்தி, கைது செய்தனர்.முன்னதாக சத்திய மூர்த்தி பவனிலிருந்த காங்கிரசாரும் பதிலுக்கு கோஷம் எழுப்பியதோடு, சாலையில் அமர்ந்து போட்டி போராட்டம் நடத்த முயன்றனர். ஆனால் அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி உள்ளே அனுப்பினர்.

இது தொடர்பாக மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் பேசுகையில், இறுதிக்கட்ட போரின்போது, 4 லட்சத்து 20 ஆயிரம் தமிழர்களை சிங்கள இராணுவம் சுற்றி வளைத்து, அவர்கள் மீது குண்டுமழை பெய்தது. ஆனால் அப்போதைய பாதுகாப்பு துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெறும் 70 ஆயிரம் பேர்தான் இருந்தனர் என்றார். செஞ்சிலுவை சங்கம் உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வெளியிடும் தகவல்கள், பிரணாப் சொன்னது பொய் என்பதை உறுதி செய்கிறது. தமிழர்களை கொன்று குவிக்க உதவிய காங்கிரஸ் கட்சி அலுவலகம் தமிழகத்தில் இருக்கக்கூடாது. அதனை மூட வேண்டும். மேலும் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் பதவி விலகு வேண்டும்" என்றார்.

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணையை நடத்தக்கோரி தமிழகம் முழுவதும் போராட்டம்: டாக்டர் ராமதாஸ்



இதுகுறித்து டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் :- மனிதகுலம் இதுவரை கண்டிராத வகையில் மிகக் கொடூரமான இனப்படுகொலைகளை இலங்கை அரசு நடத்தி இருப்பதற்கான ஆதாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியில் வந்து கொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் தமிழர்களின் இதயங்களை பிழியும் வகையில் அமைந்துள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இலங்கை படையினரால் பதுங்கு குழியில் பிடித்து வைக்கப்பட்டு, சிறிதும் இரக்கமில்லாமல், காட்டுமிராண்டித்தனமாக துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு ஆதாரமான புகைப்படங்களை சேனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டது. காண்போர் அனைவரின் கண்களில் இருந்தும் கண்ணீர் அருவியை பெருக்கெடுக்கவைத்த அந்த புகைப்படங்கள் மட்டுமே, ராஜபக்சே மற்றும் அவரது கூட்டாளிகள் மீதான போர்க்குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதுமானவை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களும், போருக்கு பின்னர் சிங்களப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட போராளிகளும் எவ்வளவு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர், போருக்கு முன்பும், போருக்கு பின்பும் தமிழ் சகோதரிகள் எப்படி எல்லாம் இரக்கமில்லாமல் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதற்கும் பல்வேறு ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் அந்நாட்டை காப்பாற்றுவதையே கடமையாக கொண்டிருக்கும் இந்தியா, அதன் போக்கை இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது. இத்தகைய சூழலில், ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்படும்போது இந்திய அரசு எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பதை கணிக்க முடியவில்லை. கொடுங்குற்றம் செய்த ராஜபக்சே சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துவிடாமல் தடுக்கும் பொறுப்பு தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு உள்ளது. எனவே, இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்காக இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும். அந்நாட்டு அதிபர் ராஜபக்சேவை சர்வதேச நீதிமன்றத்தின் கூண்டில் ஏற்றி விசாரித்து தண்டிக்க வேண்டும். 26-ந் தேதி போராட்டம் இதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசே மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 26-ந்தேதி (செவ்வாய்கிழமை) காலை 10 மணிக்கு சென்னையிலும், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பா.ம.க. சார்பில் தொடர் முழக்க போராட்டம் நடத்தப்படும். சென்னையில் நடைபெறும் போராட்டத்திற்கு நான் தலைமையேற்கிறேன். மாவட்டத் தலைநகரங்களில் கட்சியின் மாநில நிர்வாகிகள் தலைமையேற்பார்கள். இந்த போராட்டங்களில் பா.ம.க.வினரும், தமிழ் உணர்வாளர்களும் பெருமளவில் பங்கேற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றும் டாக்டர் ராமதாஸ் கூறி கோரியுள்ளார்.

இந்தியச் சங்கதிகள்

ஆங்கிலேயர்கள் விட்டுச்சென்ற பிரித்தாளும் சூழ்ச்சியை கையில் எடுத்து புரளி கிளப்பும் கருணாநிதி.



"இந்து கோவில்களை இடிக்கிறது இலங்கை, தடுக்க கருணாநிதி கடிதம்". இப்படி தலைப்பிடப்பட்டு தமிழக பத்திரிகை இணையத்தளங்கள் சிலதினங்களுக்குமுன் ஒரு செய்தி வெளியிட்டிருந்தன, "இலங்கையில் தமிழ் மொழி, கலாச்சாரம், மதம் போன்றவைகளை அழிக்க, இலங்கை அரசு திட்டமிட்டு, உள்நோக்கத்தோடு செயல்படுகிறது. இதை தடுத்து நிறுத்த வேண்டும். அங்குள்ள தமிழர்கள், ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். கொல்லைப்புற வழியாக, மிகப்பெரிய கலாச்சாரத்தையும், பழமை வாய்ந்த மதத்தையும் அழிக்கும் முயற்சியில், இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இலங்கையில் உள்ள, 89 தமிழ் கிராமங்களுக்கு, சிங்கள பெயர் சூட்டுதல், மாவட்ட, நகர, கிராம எல்லைகளை மாற்றி அமைத்தல், 367 இந்து கோவில்கள் இடித்தல் போன்ற பணிகளில், இலங்கை அரசு ஈடுப்பட்டுள்ளது. உலகின், மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற முறையில், தமிழர்கள் மீதான இந்த கொடுமைகளை உடனடியாக தடுத்து நிறுத்தும், தார்மீக கடமை இந்தியாவுக்கு உள்ளது. இதற்கான, உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். இவ்வாறு, அந்த கடிதத்தில் கருணாநிதி கேட்டுக்கொண்டார். என்று 21, 01, 2013 அன்று தமிழகத்து பிரபலமான பத்திகையின் இணையத்தளம் ஒன்று ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. கருணாநிதியின் ஆபத்து நிறைந்த அந்த பத்திரிகை ஸ்ரேற்மன்ற் பற்றி எவரும் பெரிதாக அலட்டிக்கொண்டதாக தெரியவில்லை. இருந்தும் இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் இருந்துவரும் இன மொழிப்பிரச்சினைகளுடன் மேலதிகமாக மதரீதியான பிரிவினையையும் உண்டாக்கக்கூடிய கருத்து அந்தசெய்திமூலம் சொல்லப்பட்டிருக்கிறது. கருணாநிதி சுயலாப அரசியல் செய்யவிளையும் உள்நோக்கம் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டிருப்பது அந்தசெய்தியில் உணர்ந்துகொள்ளமுடிகிறது. ஈழத்தமிழர்கள் இலங்கைக்குள் எதிர்கொண்டுவரும் சூழ்நிலகள் உலகமக்கள் அனைவர் அறிவர். அப்படியிருந்தும் எதிர்விளைவை சிந்திக்காமல் மதரீதியான முரண்பாட்டுக்கு கருணாநிதி ஒரு கடிதத்தின் மூலம் வித்திட்டிருக்கிறார். அதன் எதிர்த்தாக்கம் பின்னர் நிச்சியம் ஈழத்தமிழர்களுக்கு பாதகமாக உணரப்படும்.கருணாநிதி பத்திரிகைகளுக்கு கொடுத்திருந்த அந்த அறிவித்தல் அப்படியே ஒரு எழுத்து மாற்றாமல் நகலாக மேலே பதியப்பட்டிருக்கிறது.

இலங்கை தமிழர் பிரச்சினை சம்பந்தமாக கருணாநிதி மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவது, பொழுதுபோக்கு கூட்டங்கள் நடத்துவது. மாநாடு நடத்துவது என்பது ஒன்றும் தமிழகத்தில் புதியவிடயம் அல்ல, 1958ம் ஆண்டிலிருந்து திமுக அப்படித்தான் நடந்துவருவதாகவும், நிறைவேற்றப்படாமல் பழைய அலமாரி இருப்பிலிருந்த திமுகவின் தீர்மான நகல்களை தூசுதட்டி ஐநா சபைக்கு ஸ்ராலின் மூலம் அனுப்பியிருப்பதாகவும் கருணாநிதியே சிலநாட்களுக்குமுன் ஒப்புக்கொண்டுமிருக்கிறார். அவரோ திமுகவோ ஈழமக்கழுக்காக இதுவரை இதயசுத்தியுடன் ஒப்பேற்றிய விடயம் என்று ஒன்றையும் அவரால் சொல்லிக்காட்டுவதற்கும் இல்லை. திமுக அல்லது கருணாநிதி ஈழத்தமிழர்கழுக்கு செய்த துரோகங்கள் மட்டும் பல அரசியற் கட்சிகளால், ஆய்வாளர்களால் ஆயிரக்கணக்கில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கருணாநிதி குழுமம் இந்தியா தாண்டி ஐநா சபைக்கும் கடிதம் அனுப்பியிருந்தது. அதுவும் அனைவரும் அறிந்த விடயமே. இறுதியாக கருணாநிதி ஈழப்பிரச்சினையில் தலையிடாமலிருந்தாலே ஈழ மக்களுக்கு நிம்மதியாகிப்போகும் என்று பல கட்சிகள் கூட்டாக மன்றாட்டமாக கேட்டுவருகின்றன. இருந்தும் கருணாநிதி சோனியாவுக்கு முறைப்பாடாக அனுப்பிய கடிதம்பற்றி சிந்திக்கும்போது, யார் எவருக்கு, எதற்கு கடிதம் எழுதினார் என்பது கவனிக்கவேண்டிய ஒன்றாகும், சோனியா, இந்தியப்பிரதமருமல்ல, இந்திய ஜனாதிபதியுமல்ல, ஒரு அமைச்சருமல்ல, ஒரு இந்திய பிரஜையுமல்ல இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கையை அழிப்பதற்கு அயராது உழைத்தவர்கள் சோனியாவும், கருணாநிதியும், என்பது பலமட்டங்களில் இந்திய அரசியற்கட்சிகளால் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட ஒன்று, அதை இலங்கை ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் நேரடியாக பகிரங்க சாட்சியமாக ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தியும் இருக்கின்றனர். இருந்தும் குழந்தைத்தனமாக கருணாநிதி சோனியாவுக்கு கடிதம் எழுதுவதையும், அதை பத்திரிகைகளில் பிரசுரிப்பதையும் ஒரு முட்டாள் கூட்டம் கைகட்டி ரசிக்கிறது.

இன்னும் விவரம் புரியாமலிருக்கும் எவரையோ ஏமாற்றி அரசியல் செய்ய இப்படியான செயல்களை கருணாநிதி சில்லறைத்தனமாக கிளப்பிவிடுகிறார், அல்லது நிச்சியம் உள்நோக்கம் கொண்டு ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சதித்திட்ட தியரியை கையாண்டு இலங்கைக்குள் தொடர்ந்து அமைதியின்மையை உண்டுபண்ண மத்திய அரசுடன் இணைந்து காய்நகர்த்துகிறார், என்பதையும் எவரும் மறுக்கமுடியாது. இப்படியான ஒரு கடிதம் கருணாநிதியால் சோனியாவுக்கும், பின்னர் இந்திய மத்திய அரசாங்கத்துக்கும், அனுப்பட்டட்டுள்ளதாக ஏன் பத்திரிகைகளில் தலைப்புச்செய்தியாக்கி விளம்பரப்படுத்தப்படுகிறது. பிரதமருடன் அல்லது சோனியாவுடன் நேரடியாகப்பேசி நடைமுறையில் ஏதாவது நற்காரியத்தை கருணாநிதி செய்திருக்கலாமே, அப்படி எதுவும் நடக்காமல் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டு விளையாடுவதை சிந்தித்தபோது "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்ற பழமொழிக்கொப்ப ஆமை வேகத்தில் ஏதோ ஒரு சுத்துமாத்து, சூழ்ச்சி கபட நாடகத்தை தமது அரசியல் தப்பித்தலுக்காக சோனியாவுடன் இணைந்து கருணாநிதி மலினமாக ஈடேற்றப்போகிறார், என்பது மட்டும் புரிகிறது. இந்திய பாராளுமன்றத்திற்கான தேர்தல் அடுத்த ஆண்டு வரவிருக்கிறது. அத்தேர்தலிலும் திமுக+காங்கிரஸ் மண்ணை கவ்வும் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. களநிலமையும் 100 வீதம் அதைத்தான் பிரதிபலிக்கிறது, அப்படியே ஆகிவிட்டால் திமுக,வின் எதிர்காலம் புதைபொருள் ஆராய்ச்சிக்கு உட்பட்டது போலாகிவிடும் என்பதை கருணாநிதி நன்கு அறிந்து வைத்திருக்கிறார், அதிலிருந்து மீளவேண்டுமானால் தமிழகத்து மக்களை எப்படியாவது ஏமாற்றி தன்பக்கம் திருப்பவேண்டும், தனதுபக்கம் மக்களை திருப்புவதற்கான ஆதார நற்பெயர் திமுக, கட்சிக்கோ, கட்சியில் முழுப்பொறுப்பும் வகிக்கும் கருணாநிதியின் வாரிசுகளிடமோ துளியும் இல்லை. இந்த இக்கட்டிலிருந்து தமிழக மக்களை திசை திருப்பவேண்டும் என்றால் கேட்பாரற்று கிடக்கும் ஈழப்பிரச்சினை ஒன்றைமட்டும் கையிலெடுத்து தப்பித்தாலன்றி வேறுவழியில்லை, என்ற கணக்கே கருணாநிதியின் ஈழமக்கள் மீதான கரிசினை. இது அனைவருக்கும் புரிந்திருந்தாலும் கருணாநிதியின் தந்திரம் கருணாநிதிக்கு கைகொடுப்பதும் மறுப்பதற்கில்லை.

ஈழப்பிரச்சினை ஒன்றுதானே யாரும் எழுந்தமானத்தில் கையாளக்கூடியதாக அனாதை நிலையில் இருக்கிறது. அந்த திட்டத்தின் அடிப்படையில்த்தான் கருணாநிதி ஈழப்பிரச்சினையை கையிலெடுத்து தனது வாய் ஜாலத்தையும் சூழ்ச்சி தந்திரத்தையும் நம்பி ஈழ ஈடுபாட்டு கடிதநாடகம் காங்கிரஸின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி, இழந்த இமேஜ்சை கொஞ்சமேனும் மீட்டெடுத்து மக்கள்முன் பிரச்சாரம் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கமுடியும் என்பதும், அதற்கு திமுக உறுதியுடன் செயற்படுவதுபோல ஒரு தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் காட்டிவிடலாம் என்பதும் கருணாநிதி+சோனியா கூட்டாளிகளின் நம்பிக்கை.

மத்தியில் கருணாநிதியின் கூட்டாளிகள் ஆட்சியாளர்களாக இருப்பதால், இந்த கடிதநாடகம் செயல்வடிவம் பெற இருப்பதுபோல தோற்றப்படுத்தி காட்டிக்கொள்வதற்காக, இலங்கை அரசாங்கம், மற்றும் தமிழர் தேசியக்கூட்டமைப்பு போன்றவற்றை டில்லிக்கு அழைத்து அதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதுபோன்ற சூழ்ச்சி நாடக வேலைகளும் ஈடேற்றப்படலாம். தமிழ்நாட்டிலும் சுத்துகாத்துக்காக ஒரு பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்ளலாம், இந்த நாடகத்தில் ஈர்க்கப்பட்டு புலம்பெயர் அமைப்புக்களும், தமிழர் கூடமைப்பு போன்ற அரசியற் கட்சிகளும், கருணாநிதியின் கபட திட்டத்தில் வீழ்ந்து அவரது ஆசைப்படி தமிழக மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை தோற்றுவித்து தேர்தலில் வெற்றிபெற வைக்கும் நிலை உருவாகும் என்று கருணாநிதி நம்புகிறார், இத்திட்டத்தின் ஆரம்பம்தான் சமீபத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின், தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவர்களை ஸ்ரீலங்கா புலனாய்வுத்துறையினர் 4ம் மாடிக்கு விசாரணைக்கு அழைத்திருப்பதை கண்டித்து கருணாநிதி விடுத்திருந்த கண்டன அறிக்கை என்பதை ஞாபகப்படுத்தி பொருத்திப்பார்த்துக் கொள்ளவேண்டும். போருக்குப்பின் ஈழ அரசியலைப் பொறுத்தவரையில் புலம்பெயர் அமைப்புக்கள் வீரியமாக இருக்கின்றன என்பதும். அவைகளின் அசைவை பின்பற்றியே சர்வதேசத்தில் ஈழ அரசியல் நகர்கிறது என்பதும். புலம்பெயர் அமைப்புக்களின் நீரோட்டத்தை ஒத்து செயற்படும் கட்சியாக தமிழர் தேசிய மக்கள் முன்னணி செயற்படுவதை கருணாநிதி அறிந்துகொண்டதாலேயே அவசர அவசரமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களை தனது வலையில் வீழ்த்தும் நோக்கத்துடன் கஜேந்திரகுமார், அவர்களின் பேரன் ஜீஜீ பொன்னம்பலம், அவர்களது புகழையும் சிலாகித்து ஸ்ரீலங்கா அரசை கண்டித்திருந்ததை எடுத்துக்கொள்ளமுடியும்.

இந்திய மத்திய அரசு கருணாநிதிக்கு நட்பு சக்தியாக இருப்பதால், கருணாநிதி விரித்திருக்கும் தந்திரவலை நாடகம் விளிம்புநிலை வாக்காள மக்களை விழ்த்துவதற்கு ஓரளவு உதவக்கூடும். ஆனால் இந்தபுரளிச்செய்தியால் ஈழமக்களுக்கு இன்னும் புதிது புதிதாக இடர்ப்பாடுகள் தொடருமேதவிர எந்த நிவாரணமும் நிம்மதியும் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பதை அனைவரும் தீர்க்கதரிசனமாக புரிந்துகொள்ளலாம். தமிழினத்துரோகி, உலகப்பொய்யன், மிகப்பெரும் சுத்துமாத்துக்காரன், கபடதாரி, சூழ்ச்சிக்காரன் கொலையாளி என்று கருணாநிதி தமிழ்ச் சமூகத்தில் அறியப்பட்டிருப்பதால் கருணாநிதியின் இந்த கடித விடயத்தை பெரிதுபடுத்தாமல் புறந்தள்ளிவிட்டு தமது பணிகளை செய்யவே பலரும் முயற்சிப்பர். உண்ணாவிரத நாடகம்போல, மனிதச்சங்கிலிபோல, இதுவும் கோசத்துடன் முடிந்துவிடும் என்று மவுனம் காத்துவிடவும் முடியாது. ஏனெனில் கருணாநிதி இப்போ கிளறிவிட்டிருக்கும் தமிழ்க்கிராமங்களுக்கு சிங்களப்பெயர் சூட்டுதல், தமிழீழத்தில் 367 கோவில்கள் இடிப்பு, போன்ற குற்றச்சாட்டுக்களில் உண்மைத்தன்மை இருந்தாலும் இலங்கையில் தமிழர், சிங்களவர்களுக்கிடையே மதரீதியான ஒரு புதிய கிளர்ச்சியை கருணாநிதியின் "367 கோவில் உடைப்பு" புரளி உண்டாக்கும் அபாயம் இருக்கிறது. ஈழத்ததில் கோவில்கள் இடிக்கப்பட்டதிலும்பாற்க தமிழர் குடியிருப்புக்களும், பொருளாதார மையங்களும், பாடசாலை வளாகங்களும், 100 வீதம் அழிக்கப்பட்டிருக்கின்றன. சிங்களவன் எவ்வளவுதான் இன அழிப்பில் ஈடுபட்டிருந்தாலும் மதரீதியான துவேஷத்தை மூர்க்கமாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. ""அல்லது அவனுக்கு அந்தச்சிந்தனை முனைப்புப்பெறவில்லை"", புத்தர்சிலைகளை நிறுவினான் அது சிங்கள நாடென்று காட்டிக்கொள்ள அல்லது தமது இன ஆளுமையை பெருக்கிக்கொள்ள என்பதாகவே அந்த வினை உணரப்பட்டிருக்கிறது. இனக்கலவரம், இனப்படுகொலை, இனத்துவேஷம், என்பதே இலங்கைத்தீவில் இனங்காணப்பட்டிருக்கிறது. மத ஏகாதிபத்தியம் சிங்களவனிடம் உள்ளூர இருந்திருந்தாலும், அது மூர்க்கமாக வெளிப்பட்டிருக்கவில்லை. அதுபற்றி விபரிக்கில் அதிக பக்கங்கள் தேவைப்படும் எனவே சுருக்கம்மாக இப்போதய விடயத்தை பார்க்கலாம்,

தமிழீழத்தில் பல ஆயிரம் கோவில்கள் போரின்போது பாதிப்புக்குள்ளாகியிருக்கின்ற அவற்றுள் கிறிஸ்த்துவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் இந்துக்கோவில்கள் அனைத்தும் அடக்கம், போர் முடிவுக்குவந்தபின் அண்மையில் சிதைக்கப்பட்ட சில இந்துக்கோவில்கள் பற்றிய முறைப்பாடுகள் அந்தந்த மாவட்ட அரச அதிபருக்கு ஊர் மக்களால் முறைப்பாடக பதிவு செய்யப்பட்டிருக்கிறது அதில் குறைந்தபட்சம் 367 முறைப்பாடுகள் மட்டும் கிடைக்கப்பெற்றிருக்கலாம் அந்த தரவின் அடிப்படையில் INTERNATIONAL POLICY DIGEST சஞ்சிகை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் 367 இந்துக்கோவில்கள் எரிக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் 46 கோவில்கள் எரிக்கப்பட்டதாக அந்தச்செய்தி குறிப்பிடுகிறது ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறியதும் பெரியதுமாக 150க்கும் அதிகமான கோவில்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. பல சிறிய கோவில்கள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன. அந்த தகவலை தற்செயலாக கருணாநிதிக்கு எவராவது கொடுத்திருக்கலாம் எரிகிற வீட்டில் அள்ளியது இலாபம் என்ற கணக்கில் கருணாநிதி அந்தச்செய்தியை வைத்து அவசர அவசரமாக மத சாயத்தை பூசி புரளி கிளப்பியிருப்பது தேவையற்ற எதிர்விளைவுகளை தோற்றுவிக்கும். பத்திரிகைகள் பொது தொண்டு அமைப்புக்கள் வெளியிடும் புள்ளிவிபரங்களின் தாக்கம் வேறாகவும், உள் நோக்கத்துடன் அரசியல்வாதிகள் வெளியிடும் கதைகள் வேறு விளைவுகளையும் தோற்றுவிக்கின்றன. அதை கருணாநிதிபோன்றவர்கள் உணர்ந்து நடக்கவேண்டும். கருணாநிதியின் நஞ்சுத்தனமான பிரித்தாளும் தந்திரம், சிங்களவனை இந்துக்கோவில்களை அழிக்கும் சிந்தனையை புதிதாக தூண்டிவிட்டுவிடுமோ என்ற ஐயம் எழுந்திருக்கிறது.

சிங்களவன் தமிழனுக்கு எதிரி, தமிழ்மொழிக்கு எதிரி, என்ற நிலையுடன் இனிமேல் தமிழர்களின் வழிபாட்டிடங்களுக்கும் எதிரியாகிவிடுவானோ என்ற ஐயமும் கருணாநிதியால் பற்றவைக்கப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்குமுன் தமிழர்களின் மூதாதையர்களான நாகர்'களால் தென்னிலங்கை காலியில் நிர்மாணிக்கப்பட்டு வழிபட்டுவந்த சிவன் கோவில், அங்குவாழும் காடை சிங்களவர்களால் பாதிப்புக்குள்ளாகாமல் இன்றும் இருந்து வருகிறது. அதற்கு காரணம் சிங்களவன் இன்னும் மதரீதியாக துவேஷியாக சிந்திக்கவில்லை என்றே எடுத்துக்கொண்டாலும், கருணாநிதி போன்ற மலினமானவர்கள் அதையும் விடுவதாக இல்லை. தலைநகரம் கொழும்பிலும் சிறியதும் பெரியதுமாக பல நூற்றுக்கணக்கான இந்துக்கோவில்கள் பூஜை திருவிழாக்கள் செய்யப்பட்டு சிறப்புடன் இருந்துவருகின்றன. சிலாபத்தில் முனீஸ்வரம், தென்னிலங்கை கோடியில் கதிர்காமம். கதிர்காமத்தையொட்டி தனித்தன்மையுடன் செல்வக்கதிர்காமம். எதுவும் இதிவரை சிங்களவனால் பெரிய பாதிப்புக்குள்ளாகவில்லை.

கருணாநிதி தனது அரசியல் நலனுக்காக திட்டமிட்டு இலங்கைக்குள் மதரீதியாகவும் பிரிவினைவாதத்தை விதைத்து பிரித்தாளும் தந்திரத்தை இலங்கையில் தூண்டிவிடுகிறார் என்றே அனுமானிக்கக்கூடியதாக உள்ளது. இது ஒரு அபாய எச்சரிக்கை என்பதை தமிழ் ஈழ அடரசியல்வாதிகள் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆட்சியிலிருக்கும் ஜெயலலிதாவை வீழ்த்தி தமிழகத்தின் ஆட்சியை தனது குடும்ப கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை அரசியல் செய்வதற்கு கருணாநிதிக்கு ஏதாவது ஆதாரம் தேவைப்படுகிறது. அதன் ஆரம்பம்தான் கருணாநிதியால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட TESO, என்ற நாடக அமைப்பு. ஈழப்பிரச்சினையைவிட கருணாநிதியிடம் இப்போதைக்கு அரசியல் செய்ய வேறு வழியுமில்லை உசாராக இருக்கவேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்களுக்கே உரித்தானது. கருணாநிதி தான் தமிழகத்தை கைப்பற்றவேண்டுமென்றால் தமிழ்நாட்டை வைத்து அரசியல் செய்யவேண்டும், அதுதான் தர்மமாகும். ஆனால் நஞ்சுத்தனமான புரளிகளை கிளப்பிவிட்டு ஈழத்தை

தொடர்ச்சி 10 ம் பக்கம்





8 ம் பக்க தொடர்ச்சி

கிளர்ச்சிக்குள்ளாக்கி அரசியல் செய்வதை எவரும் அனுமதிக்க முடியாது. சுதந்திரத்துக்குப்பின் இன்றுவரை இலங்கையில் தமிழருக்கான அங்கீகாரம் மறுக்கப்பட்டே வருகிறது அதன் எதிர்வினை இனமுரண்பாட்டை தோற்றுவித்து இனப்படுகொலைவரை இட்டுச்சென்றிருக்கிறது.

ஈழத்தில் கோவில்கள் உடைக்கப்பட்டதும் உண்மை, பள்ளிக்கூடங்கள் மண்ணாக்கப்பட்டதும் உண்மை, பொதுச்சொத்துக்கள் காவு வாங்கப்பட்டதும் உண்மை, மக்கள் கூட்டங்கூட்டமாக புதைக்கபபட்டதும் உண்மை, தொடர்ந்து சிங்கள ஆதிக்கம் பெருகிவருவதும் உண்மை இவை அனைத்திற்கும் திரைமறைவில் நின்று ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருவது கருணாநிதியின் கூட்டமைப்பு காங்கிரஸ் சோனியாவின் அரசு. தனது குடும்ப நலனே குறியாகக்கொண்டு சோனியாவின் அரசு கவிழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக அனைத்து சம்பவங்களிலும் காங்கிரஸ் அரசுக்கு முண்டுகொடுத்து உறுதுணையாக நின்றுகொண்டிருப்பவர் கருங்காலி கருணாநிதி. இன்னும் ஒரு விடயத்தை இங்கு புரிதலாக்கவேண்டியுள்ளது. சோனியாவின் காங்கிரஸ் அரசுதான் ஈழத்துக்கு எதிராக, விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிராக செயற்பட்டு வருகிறது என்றும், கூட்டணி அமைத்து அரசியல் செய்யும் கருணாநிதி பேராசை குடும்ப நலன் காரணமாக அரசியல் ரீதியாக சோரம் போய்க்கொண்டிருக்கிறார் அவர் மானசீகமாக ஈழத்தமிழர்களுக்கு எதிரியாக இருக்கமாட்டார் என்ற அப்பாவித்தனமான நம்பிக்கையும் நடுநிலையிலும் விளிம்புநிலையில் இருக்கும் பலருக்கு புரியாமல் இருக்கிறது. அந்த இரண்டும் கெட்டான் விளிம்புநிலை அப்பாவித்தனம்தான் கருணாநிதி தொடர்ந்து கபடநாடகங்கள் நடத்தி ஏமாற்றி மக்கள் மத்தியில் புலுடா விடுவதற்கு இடமளித்து வருவதையும் கடைசிகாலமான இப்போதாவது கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

1980 களில் இருந்து தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் தமிழ் ஈழக்கொள்கைக்கு எதிராக கபடத்தனமான சூழ்ச்சி அரசியல் செய்து வந்திருப்பதுதான் கருணாநிதியின் முடிவான நிலைப்பாடு. என்பதை இன்னும் பலர் நம்பவில்லை அல்லது புரிந்துகொள்ளவில்லையென்றே கூறமுடியும். கருணாநிதியின் பதவி புகழ் ஆசையும் தனது குடும்பத்தை தமிழகத்தில் தொடர்ந்து நிலைநிறுத்தவேண்டும் என்ற வக்கிரமான பேராசையும், பிறாப்பால் தாய்மொழியை தமிழாக கொள்ளாத மரபும் இப்படி கருணாநிதியை ஆக்கியிருக்கக்கூடும் என்பதும் மறுப்பதற்கில்லை. எது எப்படியிருப்பினும் கருணாநிதியின் நச்சுத்தனமான பிதற்றலுக்கு காதுகொடுத்தாலே அது அழிவில் முடியும் என்பதை கடைசிகாலததில் என்றாலும் பலர் அறிந்திருக்கின்றனர் என்பது ஓரளவு நிம்மதியை தரும். தற்போதைய காலம் கருணாநிதிக்கு அரசியலில் அடுத்தகால் எடுத்துவைக்கமுடியாத நெருக்கடியை கொடுத்திருக்கிறது, உலகப்பிரசித்திபெற்ற ஊழல்க்குடும்பம் என்று அனைத்து ஊடகங்களும் மண்ணை வாரி இறைத்தாலும், எதையும் சட்டைசெய்யாமல் கருணாநிதியால் தினமும் அறிக்கைவிட்டு அரசியல் செய்ய முடிகிறதென்றால் அவையனைத்தும் தமிழகமக்களின் அப்பாவித்தனமும் ஜெயலலிதாவின் தாந்தோன்றித்தனமான நிர்வாக சீர்கேடும் என்பதே உண்மை.

தமிழ்நாட்டு தமிழர் மத்தியில், ஈழத்தமிழர் மத்தியில், இந்திய அளவில் 2009 / 2010 க்குப்பின் கருணாநிதி வாய் திறக்கமுடியாது என்றே ஊடகங்கள், தொண்டு அமைப்புக்கள், அரசியல் அனுமானிகள், கணித்திருந்தன ஆனால் அவைகளை தாண்டி எதிர்க்கட்சி தகுதியுமில்லாமல் கருணாநிதியால் அரசியல் செய்ய முடிகிறதென்றால் அந்த திறமையை பாராட்டாமல் இருக்கமுடியாது. எதை பாவித்தால் மக்களை பலவீனர்கள் ஆக்கலாம் என்பது கருணாநிதியின் மூல உபாய தந்திரம். 96 களில் ஜெயலலிதாவின் அலை மேலெழுகிறதென்று தெரிந்தபோது எம்ஜீஆர் ஆதரவாளர்களை தனது பக்கம் திருப்புவதற்காக சென்னையில் ஒரு திரைப்பட நகரத்தை திறந்து அதற்கு எம்ஜீஆர் திரைப்பட நகரம் என்று கருணாநிதி பெயர்சூட்டி ஜெயலலிதாவை பின்னுக்கு தள்ளினார். அரசு பொது மருத்துவமனை ஒன்றை இராமச்சந்திரா மருத்துவமனை என்று எம்ஜீஆர் பெயர்சூட்டி தன்னை காந்தியவாதியாக காட்டிக்கொண்டார். செத்துப்போன பெரியாரையும், அண்ணாத்துரையையும் கருணாநிதி அரவணைத்து கண்ணீர் விடாத நாளில்லை. இன்று கருணாநிதி அடிமட்டம்வரை ஒதுக்கப்பட்டிருந்தாலும் அண்ணாவளைவை அகற்றி தெருவீதி விஸ்தரிக்க ஜெயலலிதா எடுத்த முடிவு நிறைவேற்ற முடியவில்லை. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஜெயலலிதாவால் கைவைக்க முடியவில்லை, திருவள்ளுவர் சிலைக்கு வர்ணம் பூச காலதாமதமாகிவிட்டதென்று ஜெயலலிதாவின் ஆட்சியையே நிலை குலையச்செய்யும் அளவுக்கு தந்திரமும் சூழ்ச்சியும் அவரால் பரப்பப்படுகிறது. இதுதான் கருணாநிதி என்பதை ஈழத்தமிழர்கள் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்து நடந்து செல்லும் பாதையை கடக்கவேண்டும்.

❋❋

கனகதரன்.

ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கக் கோரி நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் கோஷம்



இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் நடந்த போரின் போது அப்பாவி தமிழர்களும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக அமெரிக்காவின் தீர்மானம் ஐ.நா. சபை முன் அடுத்த வாரம் வருகிறது. இந்த நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் இலங்கை ராணுவத்தால் பிடிக்கப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்ட காட்சிகள் சேனல்-4 மூலம் சமீபத்தில் வெளியானது நேற்று நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது. நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் நேற்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது பேச்சை தொடங்கியதும் அ.தி.மு.க., தி.மு.க. எம்.பி.க்கள் சிலரும் ம.தி.மு.க. கணேசமூர்த்தி, விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன் ஆகியோர் எழுந்து நின்று இலங்கைக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். லங்கையில் அப்பாவி தமிழர்கள் மீது நடந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா. சபையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். அவர்களில் சிலர் இதனை வலியுறுத்தும் வகையில் கோரிக்கை வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். மத்திய மந்திரிகள் நாராயணசாமி மற்றும் ராஜீவ் சுக்லா ஆகியோர் அந்த எம்.பி.க்களை சமாதானம் செய்ய முயன்றனர். சிறிது நேரம் கழித்து ஆந்திர மாநிலத்தை சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்கள் சிலர் தெலுங்கானா ஆதரவு கோஷங்களை எழுப்பினார்கள். பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. ஷபிகுர் ரஹ்மான் பார்க், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்திற்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்கக்கோரி கோஷம் எழுப்பினார்.

இதுபோன்று சில எம்.பி.க்கள் ஜனாதிபதியின் உரையின்போது கோஷங்கள் எழுப்பினாலும் அவர் தொடர்ந்து தனது உரையை வாசித்து முடித்தார். ஜனாதிபதி உரையின்போது ஆளும் காங்கிரஸ் மற்றும் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சில கூட்டணி கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்களும் கோஷம் எழுப்பி இடையூறு செய்தது குறித்து பாரதீய ஜனதா கட்சி மூத்த தலைவர் வெங்கையா நாயுடு கருத்து தெரிவித்தார். அவர் கூறியதாவது: ஆளும் கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த சிலரே ஜனாதிபதி உரையின் போது இடையூறு ஏற்படுத்துவது வருந்தத்தக்கது. ஆனால் இது இந்த ஆட்சியில் அனைவருமே நன்றாக இல்லை என்ற உண்மையை பிரதிபலிக்கிறது. இந்த ஆட்சியில் அனைவருமே பாதிக்கப்படுவதை நாங்கள் ஆரம்பம் முதலே கூறிவருகிறோம். அரசின் செயலற்ற கொள்கைகளால் கூட்டணி கட்சிகளிடையே கூட ஒருமித்த கருத்து இல்லை. தி.மு.க. எழுப்பிய இலங்கை பிரச்சினைக்கும், காங்கிரஸ் எம்.பி.க்கள் எழுப்பிய தெலுங்கானா பிரச்சினைக்கும் இந்த அரசு பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவதற்குள் ஒரு முடிவு காண வேண்டும். ஆளும் கட்சி எம்.பி.க்கள் ஒரு தவறான தகவலை நாட்டுக்கு அளித்திருக்கிறார்கள். இதற்கு காங்கிரஸ் கட்சி நாட்டுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என அவர் கூறினார். முன்னதாக தெலுங்குதேச எம்.பி.க்கள் சிலர் அவையின் நுழைவு வாயில் பகுதியில் அமர்ந்து தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி மறியலில் ஈடுபட்டனர்.

விஞ்ஞானம்-தொழில்நுட்பம்!





குளிர் நாடுகளில் தாவரங்களுக்கு அதிகமான வெப்பம் தேவைப்படுவதால் கண்ணாடி வீட்டிற்குள் (green house) செடிகளை வளர்க்கிறார்கள். கண்ணாடி வெப்பத்தை எளிதில் கடத்துவது இல்லை. கண்ணாடி வீட்டிற்குள் புகுந்த வெப்பம் வெளியேற வழியில்லாமல் அங்கேயே தங்கிவிடுகிறது. இதனால் கண்ணாடி வீட்டிற்குள் எப்போதும் வெப்பம் அதிகமாகவே இருக்கும். நாம் வாழும் பூமியைச் சுற்றிலும் இருக்கும் காற்று மண்டலம்தான் சுவாசிப்பதற்கு ஆக்சிஜனை வைத்திருக்கிறது. பூமி அதிகமாக சூடாகிவிடாமலும், அதிகமாக குளிர்ச்சியடைந்து விடாமலும் சம நிலையை இந்த காற்று மண்டலம்தான் ஏற்படுத்துகிறது.

நம்முடைய உடலுக்கு சட்டை எப்படியோ அதைப்போல பூமிக்கு காற்று மண்டலம்தான் சட்டையாக இருக்கிறது. காற்று மண்டலத்தில் ஆக்சிஜனுடன், கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஸ் ஆக்சைடு, மீத்தேன் ஆகிய வாயுக்களும் இருக்கின்றன. இந்த வாயுக்கள் கண்ணாடியைப்போல செயல்படுவதால் பசுமைக்குடில் வாயுக்கள் (greenhouse gases) என்று பெயர் வைத்திருக்கிறோம். சூரியனிடமிருந்து பூமிக்கு வரும் வெப்பத்தை மண், நீர், உயிரிகள் இவையெல்லாம் உறிஞ்சிக் கொள்கின்றன. உறிஞ்சிக்கொண்டவை போக மீதமுள்ள வெப்பம் பசுமைக்குடில் வாயுக்களால் வான்வெளிக்கே திருப்பிவிடப்படுகிறது. வான்வெளியில் கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஸ் ஆக்சைடு ஆகிய வாயுக்களின் அளவு அதிகரிக்கும்போது, பூமிப்பரப்பை நோக்கி திருப்பப்படும் வெப்பத்தின் அளவு அதிகரிக்கிறது இதனால் பூமி இயல்பைவிட அதிகமாக வெப்பமடைகிறது புவிவெப்பமடைவது இன்றைய உலகத்தின் தலையாய பிரச்சினையாகிப் போனது இப்படித்தான் இதைத் தவிர்க்க வேண்டுமானால், காற்று மண்டலத்திற்குள் தொழிற்சாலைப் புகை, வாகனப் புகை மூலம் மனிதகுலம் துப்பும் பசுமைக்குடில் வாயுக்களை குறைக்க வேண்டும்.

எப்படி?(மென்பொருள் இல்லாமல்!)



இது விண்டோஸ் 7-இல் இருக்கும் ஒரு பயனுள்ள வசதி என்று கூறலாம். அந்த வசதியின் பெயர் "முந்தைய பதிப்புகள்",ஆங்கிலத்தில் Previous Version எனப்படும். Previous Version? Previous Version என்பது கோப்புகளின் முந்தைய பதிப்பு ஆகும். சுருக்கமாக ஒரு பெட்டகம் என்று வைத்துக்கொள்வோம்.இந்த வசதியின் மூலம் நீங்கள் நிரந்தரமாக ஒரு இயக்கியில் (local disk) அழித்த கோப்புகளை எளிதாக மீட்க முடியும்! இது நீங்கள் ஒவ்வொரு முறை அந்த இயக்கியில் அழித்த அல்லது திருத்தம் செய்த கோப்புகளை மீட்டிக் கொண்டே வரும் அதனோடு அந்நேரத்தில் அந்த இயக்கி எப்படி இருந்ததோ அப்படியே காட்டும் அதனை நீங்கள் திறந்து /நகலெடுத்து/மீட்டிக் கொள்ளலாம். இது எப்படி வேலை செய்கிறது? இந்த வசதியை நீங்கள் திறந்து வைத்தால் இது கோப்புகளுக்கான ஒரு மீட்பு பகுதியை உருவாக்கும் (restore point). இந்த மீட்பு பகுதியின் மூலம் உங்களது அழிந்த கோப்புகளை மீட்டிக் கொள்ளலாம்!

கவனிக்க:-இதனை திறந்து வைத்த பிறகே நீங்கள் அழிக்க அல்லது திருத்தம் செய்யப்போகும் கோப்புகளை மீட்டித் தரும். இதனை திறந்து வைப்பது எப்படி?

1.My Computer -->System Protection.

2. இது எந்த எந்த இயக்கியில் (local disk) இந்த வசதி உள்ளது என்று குறிப்பிடும். இதன் மூலம் நீங்கள் உங்களுக்கு தேவையான இயக்கியில் மட்டும் இந்த வசதியை நிறுவ முடியும்.

3. நீங்கள் ஒன்று அல்லது பல இயக்கியில் இந்த வசதியை நிறுவ விரும்பினால் அந்த அந்த இயக்கியை சொடுக்கி configure என்பதனை அழுத்த வேண்டும்.

4. இதனை கடைசியாக பாப்போம்.

5. இது அந்த இயக்கியில் எதனை மீட்க வேண்டும் என்பதனை குறிப்பிடும். நீங்கள் அந்த இயக்கியில் அந்த இயக்கியின் அமைப்பையும் மற்றும் கோப்புகளையும் மீட்க விரும்பினால் முதலில் உள்ளதை சொடுக்கவும் அல்லது இயக்கியில் உள்ள கோப்புகளை மட்டும் மீட்க விரும்பினால் இரண்டாவதாக உள்ளதை சொடுக்கவும் அல்லது எதுவுமே வேண்டாம் என்றால் மூன்றாவதாக உள்ளதை சொடுக்கவும்.இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் ஒவ்வொரு முறை அந்த இயக்கியில் மாற்றம் செய்யப்போகும் அல்லது அழிக்க போகும் கோப்புகளை மீட்டிக் கொண்டே வரும்.

6. இந்த பகுதி அந்த இயக்கியில் எவ்வளவு வரை மீட்க வேண்டும் என்பதனை குறிப்பிட.இது நீங்கள் அந்த இயக்கியில் எவ்வளவு திருத்தம்/அழித்தல் செய்கிறீர்கள் என்பதை பொறுத்து குறிப்பிட்டுக் கொள்ளுங்கள்.நீங்கள் அதிகமாக இடம் கொடுத்தால் ஆடி,அம்மாவாசையில் அழித்த அல்லது திருத்தம் செய்த கோப்புகளும் இருக்கும்! இப்பொழுது இந்த வசதியை முழுவதுமாக நிறுவி விட்டீர்கள்!தொடர்ந்து விட்டதை பாப்போம்! இது நீங்கலாக ஒரு மீட்பு பகுதியை உருவாக்கி மீட்டி எடுக்க!

7. இது இதுவரை விண்டோஸ் மீட்டி எடுத்த கோப்புகள் அனைத்தையும் அழித்து புதிதாக தொடங்க.

8.சரி,இப்பொழுது நீங்கள் ஒரு இயக்கியில் சில கோப்பினை அழித்து விட்டீர்கள் அதனை எங்கு சென்று எடுப்பது? என்ற கேள்வி இப்பொழுது உங்களிடத்தில் எழும்,அக்கோப்பினை எடுக்க நீங்கள் எந்த இயக்கியில் அக்கோப்பினை அழித்தீர்களோ அங்கு சென்று வலச் சொடுக்கி -->Properties -->Previous Version. அங்கு சென்றவுடம் இப்படி இருக்கும்....

அதில் நீங்கள் இதுவரை செய்த திருத்தங்கள்/அழித்தல்கள் எல்லாம் இருக்கும்(நேரமும் தேதியும் குறிப்பிட்டு இருக்கும்).இது ஒரு தனிப்பட்ட கோப்புக்கும் பொருந்தும்.

கவனிக்க:- சில நேரங்களில் விண்டோஸ் சில கோப்புகளை மீட்டெடுக்காது! அச்சமயம் என்னை திட்டவோ பழிக்கவோ கூடாது! அதற்கு நான் பொறுப்பல்ல!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋







வரிக் குதிரைக்கு (Zebra) ஏன் அதன் உடலினைப் போர்த்தியுள்ள தோலில் வரி வந்தது என்ற கேள்விக்கு இப்போது விடை கிடைத்துள்ளது. ஹங்கேரி மற்றும் சுவீடன் நாட்டு விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் இருந்து குதிரைகளில் இரத்தம் உறிஞ்சும் ஒரு வகை ஈ தான் இதற்குக் காரணம் என்பது தெரிய வந்துள்ளது. அந்த ஈ யின் தொல்லையில் இருந்து தப்ப.. கூர்ப்பின் வழி.. இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாகச் சொல்கிறார்கள் விஞ்ஞானிகள். குறிப்பாக கறுத்த மற்றும் கபில நிறமான குதிரைகளின் உடலில் பட்டுத்தெறிக்கும் ஒளியானது முனைவூட்டப்பட்டு ஒரு தளத்தில் பயணிப்பதால்.. ஈக்களை அவை இலகுவில் கவர்ந்து விடுவதால், உணவுக்காக அந்த நிறக் குதிரைகள் ஈக்களால் இலகுவில் தாக்கப்படுகின்றனவாம். ஆனால் வெள்ளை நிறப் பின்னணியில் வரிகள் அமைந்த இந்த வரிக் குதிரைகள் ஒளியை முனைவூட்டாது தெறிப்படையச் செய்வதால் அது பல திக்கிற்கும் சிதறிப் பரவுவதால் ஈக்கள் அவற்றை எளிதில் இனங்கண்டு கொள்ளாமல் விடச் சந்தர்ப்பம் உள்ளதால்.. ஈக்களின் தொல்லையில் இருந்து வரிக் குதிரைகள் இலகுவில் தப்பி விடுகின்றனவாம். இதைத் தான் வரிக் குதிரைகளுக்கு வரி தோன்றக் காரணமாக இருந்துள்ள விடயமாக இனங்காட்டுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். எதுஎப்படி இருந்தாலும் இந்த ஆராய்ச்சி முடிவு மட்டுமே இறுதியானது என்று சொல்ல முடியாது. இந்த வரிக்குப் பின்னால் இருந்து எழுந்த பிற அறிவியல் தத்துவங்களையும் இதற்காக உடனடியாக நிராகரிக்க முடியாது என்கிறார்கள் வேறு சில ஆய்வாளர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋



உலகத்தின் நாணயம் வழங்கும் தொகையில் அமெரிக்க நாணயத்தின் அளவு தொடர்ச்சியான வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. இன்று உலகின் நாணயச் சந்தையில் ஆறு ரில்லியன் டொலர்கள் பெறுமதியான பணத்தொகை புழக்கத்திலுள்ளது. அதன் 62 வீதத்தை இன்றும் அமெரிக்க டொலர்களே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. அமெரிக்க டொலர்களின் தொலை 3.2 ரில்லியன் ஆகும். இருந்த போதும் அமரிக்க டொலர் பதினைந்து வருட தொடர் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. ஜப்பானிய யென், சீன யுவான், சுவிஸ் பிராங் ஆகிய நாணயங்கள் சந்தையை ஆக்கிரமித்து வரும் அதேவேளை வேறு நாணயங்களும் சந்தையில் அமரிக்க நாணயத்தை நிரப்பி வருவதாக ஐ.எம்.எப் தெரிவிக்கின்றது. அமெரிக்க மக்களின் பெரும்பன்மையினர் நம்பவில்லை என்றாலும் டொலர் உலகத்திலிருந்து அகற்றப்படும் நிலை உருவாகி வருவதை நிறுதத முடியாது என்று அமெரிக்க சந்தை ஆய்வாளர் டிக் போவி தெரிவித்துள்ளார்

ஒவ்வொரு வருடமும் ஒரு ரில்லியன் டொலருக்கு மேல் அதிகரிக்கும் கடன் நாடான அமெரிக்காவின் நாணயம் இன்னும் உலக நாணயமாக இருக்க வாய்ப்பில்லை என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார். கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர் பெரி எச்சன்கிரீன் கூறுகையில் டொலர் இன்று பாதுகாப்பான நாணயமாக முதலீட்டாளர்கள் கருதவில்லை என்கிறார். பெரும்பாலான பொருளியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி 2015, 2016 ஆம் ஆண்டுகளில் டொலரின் ஆதிக்கம் முற்றாக விழ்ச்சியடைய ஆரம்பிக்கும் என்கிறார்.

ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் இந்திய மத்திய அரசுக்கு எதிராக(?) மையம் கொள்ளுகிறது.



08, 02, 2013 அன்றைய ராஜபக்ஷவின் இந்தியப்பயணம், இந்திய மத்திய உளவுத்துறையின் அதி உயர் கண்காணிப்பு, மற்றும் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இந்திய அரசால் ஈடேற்றப்பட்டிருந்தாலும், ராஜபக்ஷவின் பயணம் இந்திய மத்திய அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சியை நாட்டுக்குள் தோற்றுவித்து தேசிய மட்டத்தில் ஒரு பரவலான அரசியல் பதட்டத்தையும், மனிதாபிமானம், தேசிய மனித உரிமை, ஜனநாயகம், ஆகியவற்றிற்கு உட்பட்டு அரசாங்கத்தின் அராஜக போக்கை இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்காமல் துணிவுடன் நேரடியாக எதிர்ப்பதுபோன்ற ஒருவித எச்சரிக்கை அலையையும் உருவாக்கியிருக்கிறது. ஈழத்தமிழ் இனத்தை அழித்த இலங்கை அதிபர் ராஜபக்ஷ, இந்தியாவுக்குள் வருவதை எதிர்த்து, பெப்ரவரி 8ம் நாள் அன்று, தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்யும் இந்திய அரசை எதிர்த்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தை முற்றுகையிடும் போராட்டம், தனது தலைமையில் நடைபெறும்... என்று மதிமுக பொதுச்செயலர் வைகோ ஏற்கெனவே கூறியிருந்தார். அதே கருத்துப்பட செந்தமிழன் சீமான் அவர்களும் ராஜபக்ஷவின் வரவுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தார். வைகோ, சீமான், நெடுமாறன், அவர்கள் மட்டுமல்ல ராஜபக்ஷவின் பயண விடயத்தில் தமிழ்நாடு முற்றுமுழுதான எதிர்நிலையில் இருக்கின்றதென்பதை மத்திய மானில உளவுத்துறைகளும் மத்திய அரசும் நன்கு அறிந்தேயிருந்தன. அப்படியிருந்தும் தமிழக மக்களின் மனநிலையை வழமைபோல கணக்கில் எடுக்காமல் உதாசீனப்படுத்திவிட்டு இனப்படுகொலையாளி ராஜபக்ஷவுக்கு மிகப்பெரிய அந்தஸ்தை வழங்கி கவுரவம் கொடுப்பதற்கு மத்திய ஆட்சியாளர்கள் பகீரதப்பிரயத்தனம் செய்திருந்தனர். இதற்கு இறையாண்மை என்று பெயரிடுவதா அல்லது அராஜகம் என்று வரித்துக்கொள்ளுவதா என்பதை இந்திய அரசியல் அகராதியில் பார்த்து தெரிந்துகொள்ளவேண்டியுள்ளது. மத்திய அரசாங்கம் முனைப்புக்காட்டிய ராஜபக்ஷ வரவேற்புத்திட்டத்திற்கு தமிழகத்தில் மட்டுமல்ல ராஜபக்ஷ பயணம் மேற்கொண்ட நாட்டின் அனைத்து இடங்களிலும் ஆதரவான நிலை இருக்கவில்லை என்பதை நேற்றைய முந்தினம் நாட்டில் நடந்த உணர்ச்சிமிக்க போராட்டங்களும் எதிர்ப்புக்களும் அழுத்தம் திருத்தமாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. முன்னுக்குப்பின் முரணாக குத்துக்கரணமடித்து பல வியாக்கியானங்களை சொல்லி எதையும் நியாயப்படுத்தக்கூடிய மத்திய அரசின் கூட்டணி சகாவான தந்திரவாதி கருணாநிதி கூட "கூட்டணி தர்மம்" என்ற கொள்கைவிளக்க அடிப்படையில் துணிந்து நின்று காங்கிரஸுக்கு கைகொடுக்க முடியவில்லை என்பதை கவலையுடன் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ராஜபக்ஷவின் பயணத்தை எதிர்க்கப்போவதாக அறிக்கை விடுத்து ஏமாற்றி மக்கள் ஆதரவு தேடிய கருணாநிதி அன்றைய தினம் தனது சந்தர்பத்துக்கேற்ப நிறம்மாறும் உத்தியை சரியாக பயன்படுத்தி எவருக்கும் புரியாவண்ணம் மிக நுண்ணியமாக சிந்தித்து சோனியாவை புண்படுத்தாவண்ணம் வழமைபோல தனது சூழ்ச்சி தந்திரத்தை பாவித்து டெசோ என்ற குடையை அவசரமாக விரித்து அதன்கீழ் உட்கார்ந்து டெசோவின் மூலமே ராஜபக்ஷவை எதிர்ப்பதாக சோனியாவுக்கு காட்டி விளம்பரம் செய்து தானும் தப்பி திமுக வையும் தப்ப வைத்திருந்தார். 2013 மார்ச்சில் ஜெனீவா ஐ.நா மனித உரிமை பேரவையின் 22ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்ற ராஜபக்ஷவின் அறிவிப்புக்கு பின்னணியில் இந்திய அரசின் மறைமுக ஒத்துழைப்பும், அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தை மீண்டும் இழுத்தடித்து காலதாமதத்தை ஏற்படுத்தி நீர்த்துப்போகச்செய்யும் தந்தரம் இருப்பதாகவே உணரப்படுகிறது. ஏற்கெனவே 2012 ல் ஐநா மன்றத்தின் 21வது மனித உரிமை அமர்வின்போது அமெரிக்கா கொண்டுவந்த இலங்கைக்கு எதிரான? தீர்மானத்தை ஆதரித்து இலங்கைக்கு எதிரான நிலையெடுக்கவேண்டிய தர்மசங்கடம் இந்திய மத்திய அரசுக்கு அப்பொழுது உருவாகியிருந்தது. அந்த நிலைக்கு சனல் 4 தொலைக்காட்சியின் ஈழப்படுகொலை ஆவணப்படமும், உலக நாடுகள் ஸ்ரீலங்காமீது கொண்டுள்ள அதிகப்படியான கொதிநிலையும் காரணமாக தமிழக அரசு சட்டசபையில் இயற்றிய தீர்மானம், மற்றும் தமிழக ஈழ ஆதரவு கட்சிகள்+ அமைப்புக்களின் போராட்டமும் சோனியா அரசுக்கு நெருக்கடிகளை உண்டுபண்ணி அமெரிக்க தீர்மானத்துக்கு ஆதரவான நிலைக்கு காலம் இட்டுச்சென்றது

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படாமல் திமுக ஆட்சி இருந்திருக்குமாயின் நிலை வேறுமாதிரி அமைந்திருக்கும். 1, தமிழகத்தில் திமுகவின் படுதோல்வி, அதனால் உண்டான ஆட்சி மாற்றம், 2, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் மத்திய அரசை நோக்கிய இலங்கைக்கு எதிரான பொருளாதரத்தடை, இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களை ஐநா சபைக்கு கொண்டு செல்லவேண்டுமென்ற வற்புறுத்தல், அதற்காக சட்டசபையில் இயற்றப்பட்ட தீர்மானம்., 3, கட்சி அரசியல் ரீதியாக தமிழக மக்களிடம் இருந்து காங்கிரஸ் காணாமல் போய்விடக்கூடாது என்ற உள் நோக்கம். 4, வீழ்ச்சியின் பின்னரான கருணாநிதியின் சந்தற்பவாத சூழ்ச்சித்தனமான அரசியற் தந்திரம், அனைத்தும் ஒன்று சேர்ந்து 2012 ல் அமெரிக்க தீர்மானதை எதிர்க்காமல் காட்டிக்கொள்ளவேண்டிய சூழ்நிலை சோனியா அரசுக்கு உருவாகியிருந்தது. ஆனாலும் அந்த தீர்மானத்தை சந்தற்பவாதம் கருதி ஆதரிப்பதுபோல காட்டிக்கொண்டாலும் உள்ளூர தீர்மானத்தை நீர்த்துப்போகச்செய்யும் வழியூடாக பயணிக்கச்செய்து ராஜபக்ஷவின் விருப்பத்தை நிறைவுசெய்யும் வகையில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங், திரைமறைவில் பகீரதப்பிரயத்தனம் செய்து பணியாற்றியிருந்தார், எனவேதான் அந்த தீர்மானத்தில் அமெரிக்கா முன்மொழிந்திருந்த வேலைத்திட்டங்கள் எதையும் இலங்கை கவனத்தில்க்கொள்ளாமல் உதாசீனப்படுத்தியிருந்தது. அடுத்து 2013 மார்ச் வரவிருக்கும் மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிக்கா சற்று கடுமையை காட்டக்கூடிய சந்தற்பம் உருவாகலாம் என்பதும், அதை சமாளிக்க இலங்கைக்கு இந்தியாவே கை கொடுத்து உதவவேண்டியிருக்கும் என்பதும் சாதாரணமாக புரியக்கூடிய ஒன்று. ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வுத்திட்ட இழுபறி நிலைக்கு இந்திய அரசே காரணகர்த்தா என்பது வெளிப்படை. ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு உள்நாட்டு எதிர்ப்புக்கு மத்தியிலும் பயிற்சி அளிப்பது, இனப்படுகொலை குற்றவாளியை உள்நாட்டு மக்கள் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வரவேற்று மரியாதை அளிப்பது, போன்ற அராஜக செயல்கள் உள்நாட்டுக்குள் ஒரு பிரிவினை உணர்வை மக்கள் மனதில் எழுப்பியிருக்கிறது. அந்த நிலை தொடரும்பட்சத்தில் இன்னும் விரிசல் அதிகரித்து எதுவும் நடக்கலாம் என்ற நிலை உருவாகலாம். அதன் ஆரம்ப நிலையே பெப் 08 நாள் ராஜபக்ஷவுக்கு எதிரான நாடு தழுவிய ஈழ ஆதரவாளர்களின் மிகப்பெரிய முற்றுகைப் போராட்டம். இந்தியாவின் இந்நிலைக்கு அரசியல் நாகரீக பண்பாட்டு முறைகேடுகள் நிறையவே இருந்தாலும். முக்கிய காரணியாக கீழ்க்காணும் விடயங்களை சுட்டி சொல்லமுடியும்,

1, பிழையான வெளியுறவு கொள்கை அடிப்படையில் இன அழிப்பில் ஸ்ரீலங்காவுடன் இணைந்து பங்காற்றியமை. 2, வழிபாட்டுக்குரிய தலைவர்களை திருப்திப்படுத்தும் வகையிலான வெளியுறவு கொள்கைவகுப்பாளர்களின் தொலைநோக்கற்ற கட்டப்பஞ்சாயத்து முறையிலான கொள்கை வகுப்பு. 3, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி வைத்திருக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக முரண்பட்ட கொள்கைகளுடைய பத்து இருபதுக்கு மேற்பட்ட கட்சிகளின் கூட்டணி. 4, மன்னர் ஆட்சியை ஒத்த குடும்ப அரசியல் பின்னணிகள். அதனால் ஏற்படும் அதிகார துஷ்ப்பிரயோகம், ஊழல். இவைகளை முதன்மையாக கொள்ளமுடியும். இந்த கலாச்சாரம் மத்திய, மானில, அரச, அதிகார அனைத்து மட்டங்களிலும் தொற்றுநோய்போல் பாரவியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து குழிபறிக்கும் இந்திய அரசின் சதி, இனப்படுகொலை குற்றவாளியை காப்பாற்ற போடும் இரட்டைவேடம் இவைகளை தமிழக மக்களும் அரசியற்கட்சிகளும் நன்கு புரிந்துகொண்டுவிட்டன, இனியும் பொறுமை காத்து அரசியல் செய்யுமளவுக்கு தமிழ்நாட்டு களம் இருப்பதாக தெரியவில்லை. அந்த நிதர்சனத்தை பெப் 08, ராஜபக்க்ஷவுக்கு எதிரான போராட்டம் இந்திய மட்டத்தில் அப்பட்டமாக வெளிப்பட்டிருந்தது. தமிழகத்தின் ஈழ ஆதரவு காவர்களான மதிமுக பொதுச்செயலாளர் வைகோ. நெடுமாறன், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான், மே 17 இயக்கம், இடிந்தகரை அணு உலை எதிர்ப்பு போராளிகள், இன்ன பிற சிறிய கட்சிகள் அமைப்புக்கள் அனைத்தும் ஒரே உணர்வுடன் ஒன்றிக்கலந்து வெவ்வேறு களங்களில் கைகோர்த்து மலைபோல் நிமிர்ந்து நின்றன.

இது கயமைகளின் கூட்டுச்சதியை உடைத்தெறிய காலம் உருவாக்கியிருக்கும் அணுக்கற்றைகள் ஆகவும் இருக்குமோ என்பதும் மறுப்பதற்கில்லை. தமிழக கடலில் மீனவர்களின் பாதுகாப்பின்மை, கூடங்குளம் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியிருக்கும் அணு உலை, மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்துக்கு மின்சாரம் பகிரப்படாத பிரிவினை, தேசிய நதிநீர் முகாமைத்துவத்தில் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல் நடத்தும் கள்ள நாடகம். சிறு வர்த்தகம், உற்பத்திகளை பன்னாட்டுக்கு விற்கும் பொறுப்பற்ற ஊதாரித்தனம், வரைமுறைகளற்ற ஊழல். அனைத்தும் சேர்ந்து மக்களை வீதிக்கு கொண்டுவந்து போராடுவதற்கு பெரு வழியை இந்திய மத்திய அரசு திறந்துவிட்டிருக்கிறது. இந்தப்போராட்டச்சூழல் மத்திய காங்கிரசு அரசுக்கு ஒரு திடுக்கிடத்தக்க பின்னடைவை தோற்றுவித்து சிந்திக்க வைத்திருக்கும் என்பது அடுத்த நகர்வுகளில் நிச்சியம் தெரியவரும். வரும்காலங்களில் ஈழ அரசியல் அணுகுமுறையில் இந்தியா சற்று நிதானத்துடன் நடந்துகொள்ளுவதற்கு இன்றைய போராட்டம் பிள்ளையார் சுழி போட்டிருக்கிறதென்பதை ஆட்சியாளர்கள் வெளிப்படையாக காட்டிக்கொள்ளாவிட்டாலும் கிளர்ச்சியின் தாக்கம் வரும் காலங்களில் உணரக்கூடியதாக இருக்கும். அந்த "அனுமானம் பொய்க்குமாக" இருந்தால் நாடு பிரிவினையை நோக்கிச்செல்வதை எந்த சாணக்கியராலும் தடுக்கமுடியாமல் போகலாம். இன்றைக்கு தமிழகத்தில் கட்சி அரசியல் போராட்டக்காரர்களாக இருக்கட்டும், சாதி கட்சி அரசியற் போராட்டக்காரர்களாக இருக்கட்டும், அணு உலை போராளிகளாக இருக்கட்டும். மே 17 அமைப்பு போன்ற சமூக போராளிகளாக இருக்கட்டும். சீமான் போன்ற இளைய அரசியற்போராளிகளாக இருக்கட்டும், புரட்சிகர ஊடக இணைய போராளிகளாக இருக்கட்டும் அனைத்து தரப்பினரும் மத்திய மானில அரசுகளை எதிர்த்து போராட புறப்படும்போது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக ஈழ போராட்ட தீப்பந்தத்தையே முதலாவதாக தெரிவுசெய்து கையில் எடுத்துக்கொள்ளுகின்றனர் (இதை அனைவரும் சிந்தித்துப்பார்த்து புரிந்துகொள்ள கடமைப்பட்டவர்களாயுள்ளனர்.) இங்குதான் சிந்திக்கவேண்டும் காந்தியின் போராட்ட பின்னணி, நேதாஜி சுபாஸ் சந்திரபோசின் போராட்ட பின்னணி, பகத்சிங்கின் வீரம் செறிந்த பின்னணி, இன்னும் எத்தனையோ வரலாற்று பின்னணிகள் இந்தியாவில் இருந்தும். அனைத்தையும் கடந்து (தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர் என்று பிரச்சாரப்படுத்தினாலும்) விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பின்னணியை மட்டும் ஏன் தமிழக (அரசியற்)போராட்டக்காரர்கள் பின்பற்றுகின்றனர்? மத்திய, மானில அரசுகளிடம் அவர்களுக்கு ஆயிரம் கோபம் இருக்கிறது. இலட்சம் கோரிக்கைகள் இருக்கின்றன அந்த கோபங்கள் அனைத்தையும் நேரிடையாக ஆட்சியாளர்களின் முன்வைத்து எதிர்கொள்ளுவதற்கு அவர்களுக்கு தார்மீக நியாயம் இருக்கிறது அப்படியிருந்தும் ஏன் உள்நாட்டு போராட்ட வரலாற்றுப்பின்னணியை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர் சிந்தித்துப்பார்த்தால் அரசியல் ரீதியாக, கட்சிரீதியாக, அமைப்பு ரீதியாக, போராடி மன்னர்கள் போல வாழ்ந்து அனைத்து வகையிலும் தொடர்ச்சியாக சுரண்டி ஏமாற்றி வரும் வஞ்சக ஆளும் வர்க்கத்திடம் எதையும் சாதாரணமாக போராடி பெற்றுவிடமுடியாது ஏமாற்றமே மிஞ்சும் என்பது புரியப்பட்டுவிட்டது. இந்த வஞ்சகர்களை வெல்லவேண்டுமானால் விடுதலைப்புலிகள் கையில் எடுத்த சுதந்திர தனிநாடு கொள்கையின் உயிர்ப்பான தத்துவம் இவர்களை தெரிந்தோ தெரியாமலோ உள்ளூர ஈர்த்துவிட்டிருக்கிறது. தலைவர் பிரபாகரனின் உறுதியும் நேர்மையும் அவர்களை கவர்ந்திருக்கிறது. என்பதை காலங்கடந்தாவது ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளக்கூடும். தமிழகத்தில் மாறி மாறி ஆட்சியாளர்களாக முடிசூட்டிக்கொள்ளுவதற்கு முட்டிக்கொள்ளுவது தவிர திமுக, அதிமுக இரண்டு கட்சிகளும் இப்போதைக்கு மட்டுமல்ல எப்போதைக்கும் மத்திய அரசிடமிருந்து தனது மானிலத்துக்கான அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுக்கப்போவதில்லை என்பது ஒவ்வொரு தமிழனுக்கும் மனதில் தீராவடுவாக பதியப்பட்டிருக்கிறது. 1,மீனவர்களின் படுகொலைகள். 2,கூடங்குளம் அணு திணிப்பு அடக்குமுறை. 3, நதிநீர் முகாமைத்துவம். 4,மின்சார ஒடுக்குமுறை, 5,ஈழப்படுகொலைகள். அவற்றின் பகிரங்கமான வெளிப்பாடுதான் ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பான போராட்டம்.

இது ஒரு ஆரம்பமே.

போராட்டங்கள் இன்னும் தொடரும், தனித்தமிழீழம் முதலில் பிறக்கிறதோ, தனித்தமிழ்நாடு முதலில் பிறக்கிறதோ என்பதை இப்போதைக்கு கணிக்கமுடியாது. அப்படியொரு நிலை வராமல் தடுத்து அவற்றை சீராக்கவேண்டிய தலையாய பொறுப்பு இந்திய மத்திய அரசிடமே இப்போதைக்கு உள்ளது. இந்திய மத்திய அரசின் வெளியுறவுக்கொள்கை சீராகுமிடத்தில் ராஜபக்ஷகளுக்கு அதிகம் வேலையிருக்காது. ஐநா மன்றத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவரவேண்டிய தேவையும் இருக்காது. நெருப்பு சுவாலையாக மாறாவிட்டாலும் பற்றிக்கொண்டுவிட்டது என்பது வெப்பத்திலிருந்து உணரமுடிகிறது.

கனகதரன்.

மண் மீட்பு கடமை

(1930) அன்றும் (2013) இன்றும் தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களது பூர்வீக நிலங்களைச் சிதைத்து திண்டாடும் திட்டங்கள் தொடர்கின்றன!!

தமிழர் தாயகமாக கருதப்படும் வடகிழக்கில் அன்றில் இருந்து இன்று வரை இவ்வுலகத்தினில் ஆட்ச்சி செலுத்திவரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்ட சதி வலையில் சிங்களவர்களை குடியேற்றி வந்துள்ளனர். 1930 ஆம் ஆண்டில் டீ. எஸ். சேனனாயக்கா அவர்களின் மூளையில் இது நன்கு பதிந்துள்ளது என்பது தெட்டத்தெளிவாக உணரக்கூடியதாய் இருக்கின்றது.

தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களது பூர்வீக நிலங்களைச் சிதைத்து திண்டாடும் திட்டங்கள் முதல் கட்டமாக கிழக்கு மாகாணத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டன.

”ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டம் “ என்ற பெயரில் பட்டினப்பளை “கல்லோயா” வாகவும் நீர்பாசனக்குளங்களை புனரமைப்புச் செய்கின்றோம் என்ற பூச்சாண்டியில் பதிவில் குளம் “பதவியா” என்ற பெயராகவும் மாறியது. “அல்லை“ “கந்தளாய்“ குளங்கள் சிங்களவர்களின் வயல்களுக்கு தமிழர் பிரதேசத்தின் நீரைப்பாச்சும் திட்டமானது.

1960 ஆம் ஆண்டு சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970 ஆம் ஆண்டு 1500 சதுரமைல் பரப்பழவில் “ அம்பாறை“ “சேருவாசில” என சிங்களத் தொகுதிகள் முளைத்தன.

இதேபோல் மணலாற்றில் 3650 ற்கு மேற்ப்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ம் திகதி நாயாற்றுக்கு மேற்கேயும் தெற்கேயும் உள்ள பல தமிழ்த் தொன்மைக் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களாக மாறியது. இதன் விளைவு 1986 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் “ வெலி ஓயா” என்ற பெயரில் வாக்காளர் படடியல் இணைக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15 ம் திகதி இலஙகை அரசினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் முல்லைத்தீவு வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி விசேட பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டது. சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அரசினால் முன்வைக்கப்பட்ட பிரகடனம் இது என்பது தெளிவு.

திருமலை மாவட்டத்தை உற்று நோக்குவோம். இது வடகிளக்குத் தமிழர் தாயகத்தின் முக்கிய வரலாற்றுப் புகழ் மிக்க ஒரு மாவட்டமாகும். இங்கு சிங்களக் குடியேற்றங்கள் எல்லை மீறியதாகவே உள்ளன.

இங்கு 1962ம் ஆண்டிற்க்கு முன்பே குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. “பனிக்கட்டி முறிப்பு” என்ற தமிழ்ப்பெயர் ”பனிக்கட்டியாவ” என மாற்றப்பட்டது. பன்குளத்தின் அருகே அமைந்த ஊர்தான் பனிக்கட்டி முறிப்பு எனப்படுவது. இங்கு ஒரு விகாரையும் நிறுவ சிங்களவர்கள் முயன்றனர். இது எட்வேர்ட் எனும் இங்கிலாந்து அரசர் காலத்திலும் கூட தனித் தமிழ் கிராமமாக இருந்ததற்க்கான வரலாற்று ஆவணங்கள் இனறும் உள்ளன.

பன்குளத்தில் உள்ள கனகசபை என்ற தமிழ் மகனின் சொந்தக்காணியை அபகரித்து 1973-09-27 ம் திகதி சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளரும் அமைச்சருமாக இருந்த கே. பி. இரத்நாயக்க பௌத்த பாடசாலைக்கு அடிக்கல் நாட்டினார். விஸ்வராமா சாபாவ பௌத்த கோயில் அடிக்கல் நாட்டு விழாவும் தமிழர் பூமியில் அன்று கோலாகலமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கப்பல்துறை பாலம்போட்ட ஆறு ஆகிய இடங்களில் உள்ள தமிழரகளின் காணிகளில் சுமார் 5000 ஏக்கரில் சிங்களக் குடும்பங்களை குடியமர்த்த வேண்டுமென 04-09-1954 ல் தீர்மானிக்கப்பட்ட திருமலை துறைமுக அதிகாரசபையின் தீர்மானத்தை செயல்ப்படுத்த வேண்டுமென பலர் வெளிப்படுத்தினர்.

பண்டி இறச்சிக்கடை நடாத்திய பொடியப்பு சிங்கோ என்ற சிங்களவரின் மனைவிக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்தது. அத்துடன் இறச்சிக்கடை நடாத்திய பொடியப்பு சிங்கோ பௌத்த விகாரையின் கமிட்டி தலைவராகவும் இருந்துள்ளார்.

கட்டுக்குளப்பற்று மேற்கு எல்லையில் உள்ள குருவியன்குளம் பொய் ஒடிச்சான் குளமங்களோடு தொடர்புடைய காட்டுப்பிரதேசத்தை திருமலை அரச அதிபரே நிர்வாகித்து வந்தார். அதை பௌத்த விகாரை பரிபாலனசபை 1988 ல் பொறுப்பேற்று குடியேற்றத்தை உருவாக்கியது. அது மட்டுமன்றி முதரிக்குளத்தின் அருகே விமானப்படை முகாமையும் சிங்களக் குடியிருப்புகளையும் உருவாக்கி - முதலிக்குளம் என்ற தமிழ்ப் பெயரை”மொறவேவ” என்ற பெயரோடு ஊரை நிறுவி தமிழர்களின் 340 ஏக்கர் நீர்பாசனக் காணியையும் பறித்தெடுக்கப்பட்டு பாரிய சிஙகளக் குடியேற்றமாக மாறியது. இவ்வாறாக மாறி மாறி ஆட்சிபீடமேறிய சிங்கள அரசுகள் இன்று(1998) சுமார் 128 ற்கும் மேலாக திருமலை மண்ணில் சிங்களக் கிராமங்களை உருவாக்கியுள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள பெரிய குளம் என்னும் தமிழ் பிரதேசத்தில் 500 ஏக்கர் நிலத்தை பௌத்த விகாரைகளுக்கும் சிங்கள குடிகளுக்கும் கொடுக்கவேண்டி 1965 யூலை 26 ம் திகதி திருமலைக் கச்சேரியில் உயர் அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாறான மகாநாடுகள் மூலம் 1973 ம் ஆண்டில் 10738 குடும்பங்கள் இம் மாவட்டத்தில அத்துமீறி குடியேறியுள்ளன. இது அன்று வெளியான “சுதந்திரன்” இதழின் கருத்தாகும்.

தமிழ் மக்களின் தாயகத்தை துண்டாடுவதில் இவ்வரசாங்கங்கள் காட்டிய ஆர்வத்தையும் அவாவையும் அப்பட்டமாகப் படம்போட்டுக் காட்டுகின்ற இவ்வாக்குமூலம் வாசகர்களின் அறிதலுக்காக கொடுக்கப்படவேண்டியதே.

1983 ம் ஆண்டு வான் ஓயா மல்வத்து ஓயா பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றும் வேலைகள் ஆரம்பித்துவிட்டன. மகாவலி அமைச்சரின் இந்த இரகசியத் திட்டத்தை தமிழர்கள் சிலர் தடுப்பதற்கான காரியங்களில் இயங்கி வந்தனர் இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு 45000 மக்களைக் குடியேற்றவதில் வெற்றி கண்டோம் என பேறிமன் குணறட்ண ஒருசமயம் கூறியிருந்தார்.

இந்தக் குடியேற்றங்கள் தாயகத்தை அழித்துவிடும் எனபது உண்மை. எனவேதான் திட்டமிட்ட முறையில் வலு கெட்டித்தனமாக அன்று தொடக்கம் இன்றுவரை லடகிழக்கில் சிங்கள குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டே வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மல்வத்து ஓயா குடியேற்றத்தினூடாக மன்னாரை மேல் மாகாணத்திலிருந்து அப்புறப்படுத்தும் நாசகார நோக்கமும் இருந்தது. பதவியாக் குடியேற்றத்தினை பாதுகாக்கவும் தமிழரகளின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் பிரித்து தமிழ் மக்களை வேறுபடுத்தும் மையக்கல்லாகவும் வெலிஓயா குடியேற்றத்திட்டம் விழங்கிவருகிறது. மேற்குறிப்பிட்ட குடியேற்றத்திட்டங்களில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா முன்நின்று உழைத்தார்.

திருகோணமலைக்கு வடக்கே இருக்கும் யான் ஓயா பிரதேசத்தில் ஐம்கதாயிரம் மக்களை குடியமர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலையையும் மட்டக்கிளப்பையும் துண்டித்து பதவியாக் குடியேற்றத்தை வலுப்படுத்துவது இங்கு மாறி மாறி ஆட்சி பீடமேறிய பேரினவாத அரசுகளின் உளநோக்கமாகும்.

திருகோணமலை வடகிழக்கு மாகாண அரசின் தலைநகரம் என்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்றும் தலைநிமிர்ந்து சொல்கின்றோம்.

தொடர்ச்சி பக்கம் -21

அழகு + ஆரோக்கியம் + மருத்துவம்



மருந்து! -கறிவேப்பிலை



கறிவேப்பிலையின் தாவரப்பெயர் முரையா கோய்னிஜா. இது ருட்டேசி என்ற தாவரக் குடும்பத்தை சேர்ந்தது. கறிவேப்பிலையில் வைட்டமின் ஏ, பி, சி, கால்சியம் போன்றவைகள் உள்ளன. மேலும் கறிவேப்பிலையில் கோயினிஜாக், குளுகோசைட், ஒலியோரெசின், ஆஸ்பர்ஜான் சொரின், ஆஸ்பார்டிக் அமிலம், அயாமைன், புரோலைன் போன்ற அமினோ அமிலங்கள் உள்ளது. இவைகள் தான் கறிவேப்பிலைக்கு இனிய மணத்தை தருகிறது. பல மருத்துவ குணங்களையும் வெளிப்படுத்துகிறது. இந்திய சமையலில் வாசனைக்கு சேர்க்கப்படும் மசாலா அயிட்டமான கறிவேப்பிலை புற்றுநோயை ஆரம்பத்திலேயே கொல்லும் ஆற்றல் உடையது என்பதை அண்மையில் ஆஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். நியூட்ரிசன் சைன்டிஸ்ட் ஆப் சிசைய்ரோ என்பது ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம். மசாலாப் பொருட்கள் நல்ல வாசனை உடையது மட்டுமல்ல. அது பல மருத்துவ குணங்களை கொண்டது என்பதை அந்நிறுவனம் கண்டறிந்துள்ளது. இந்நிறுவன தலைமை ஆராய்ச்சியாளர் லனேகோபியாக் கறிவேப்பிலை சிறந்த ஆன்டி ஆக்ஸிடென்டாக இயங்குகிறது என்கிறார்.

இது புற்றுநோய், இதய நோய்களை குறைக்கும் ஆற்றல் கொண்டது. மேலும் கறிவேப்பிலையால் ஞாபக சக்தி எளிதில் கிடைக்கிறது என்கிறார் இவர். கறிவேப்பிலையிலிருந்து எண்ணை எடுத்து அதை நுரையீரல், இருதயம், கண்நோய்களுக்கு தலைக்கு தேய்க்கும் எண்ணையாக பயன்படுத்தலாம் என இங்கிலாந்தில் உள்ள வேளாண் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. சாதாரணமாக 100 கிராம் கறிவேப்பிலையை அரைத்து சாற்றை எடுத்து 100 கிராம் தேங்காய் எண்ணையில் கலந்து இதமான சூட்டில் ஈரப்பதம் நீங்கும் வரை காய்ச்சி தினசரி தலைக்கு தேய்த்து வந்தால் உடல் உஷ்ணம் மங்கும். பரம்பரை நரை வராது. கண்பார்வை குறைவு ஏற்படாது. கறிவேப்பிலையை அரைத்து சாப்பிட்டால் நுரையீரல், இருதய சம்பந்தப்பட்ட ரத்த சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது குறையும் என்கிறது இந்நிறுவனம். திருவனந்தபுரத்திலுள்ள கேரளா யூனிவர்சிட்டியில் கறிவேப்பிலையையும், கடுகையும் தாளிக்க பயன்படுத்தினால் அதனால் நன்மை உண்டா? என்பது பற்றி ஆராய்ந்தார்கள் மருத்துவ குழுவினர். அதில் கறிவேப்பிலையும், கடுகும் சேர்ந்து நமது திசுக்களை அழிவிலிருந்து பாதுகாக்கிறது என்பது தெரியவந்தது. மேலும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதையும் தடுக்கிறது. பிரிரேடிக்கல்ஸ் உருவாவதால்தான் டி.என்.ஏ. பாதிக்கிறது. செல்களிலுள்ள புரோட்டின் அழிகிறது. விளைவு கேன்சர், வாதநோய்கள் தோன்றுகின்றன. தாளிதம் செய்யும்போது நாம் பயன்படுத்தும் கறிவேப்பிலையும், கடுகும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதை தடுப்பதாக ஆய்வில் கண்டறிந்துள்ளனர். இதுதவிர நீரழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலை இலையையும், மாலையில் 10- இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டுமென்று சாற்றை விழுங்கி வந்தால் மாத்திரை சாப்பிடும் அளவை பாதியாக குறைத்து விடலாம் என்கிறார்கள் மருத்துவர்கள். தினசரி வெறும் வயிற்றில் கறிவேப்பிலை இலையை 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உடல் கனமாவது குறைக்கப்படும். சிறுநீரில் சர்க்கரை வெளியேறுவதும் முற்றிலும் தடை செய்யப்படும். கறிவேப்பிலை ரத்தத்தில் இருக்கும் கொழுப்பை குறைக்கவும், அறிவை பெருக்கவும் உதவுகிறது. கறிவேப்பிலையை பச்சையாகவே மென்று தின்றால் குரல் இனிமையாகும். சளியும் குறையும்.



நமது தோலில் நிறமாற்றம் உண்டாவதை பொதுவாக தேமல் என்று சொல்கிறோம். இந்த நிறமாற்றத்திற்கு பல்வேறு மருத்துவ காரணங்கள் இருக்கின்றன. இந்த பிரச்சனையைப் போக்க அலோபதியை நோக்கிப் போனால் வருமானத்தில் பாதியை இழக்க வேண்டியது தான். ஆண்களானாலும், பெண்களானாலும் தங்களது முகத்தை அழகாக பிரகாசமாக வைத்துக் கொள்ள நினைப்பது இயல்பு. முகத்தை மெருகூட்டவும், பராமரிக்கவும் தங்களால் என்னென்ன முடியுமோ அவ்வளவையும் செய்கிறார்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு அழகு சாதனங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் காலங்காலமாய் கொழித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகச் சாதாரணமாக கிடைக்கக்கூடிய நமது இயற்கையான பராமரிப்பு முறைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. தேமல் பிரச்சனைக்கு சித்த மருத்துவத்தில் பல்வேறு தீர்வுகள் உள்ளன. தேமலை கிராமப்புறங்களில் "மங்கு" என்றும் அழைப்பதுண்டு. சருமத்தில் உள்ள தேமல், தழும்புகள், அடையாளங்கள் நீங்கிட நாட்டு மருந்துக் கடைகளில் உள்ள பளிங்கு போல தோற்றமளிக்கும் அரிதாரம் என்ற பொருளை கோவைக் காயின் சாறு விட்டு நன்கு அரைத்து ஒரு நாளைக்கு இரண்டு முறை (காலை மற்றும் மாலை) பத்து நாட்களுக்கு பாதிப்படைந்த இடத்தில் தொடர்ந்து பூசி வர தோல் பிரச்சனைகள் மறைந்து சருமம் அழகாகும். அரிதாரம் என்ற பொருள் பளிங்கு போல தோற்றமளிக்கும். அரிதாரம் கட்டியாகவும், தூளாகவும் கிடைக்கும். இதில் கட்டியாக உள்ள அரிதாரம் என்ற பொருளை குறைந்த அளவே (அரை பலம்) மட்டும் பயன்படுத்த வேண்டும்.

உணவுகள!



இன்றைய காலத்தில் நவீன தொழில்நுட்பங்கள் நிறைய வந்துள்ளன. அத்தகைய தொழில்நுட்பங்களை கையாள்வதற்கு பெரியோர்களுக்கு தெரிகிறதோ இல்லையோ சிறிய குழந்தைகளுக்கு நிறைய தெரியும். இவை அனைத்திற்கு அறிவுத்திறன் தான் காரணம். தற்போதுள்ள குழந்தைகள் அனைவரும் மிகுந்த புத்திக்கூர்மையுடன் இருக்கின்றனர். அவர்களிடம் எந்த ஒரு விஷயத்தை சொன்னாலும், அதை அவர்கள் மறக்காமல் ஞாபகத்துடன் வைத்திருப்பார்கள். ஏனெனில் அவர்களுக்கு கொடுக்கும் ஒவ்வொரு உணவையும் பெற்றோர்கள் பார்த்து ஆரோக்கியமானதாக கொடுக்கின்றனர். மேலும் குழந்தைகளுக்கு எந்த ஒரு மனஅழுத்தமும் இல்லை. ஆனால் பெரியோர்களுக்கு வேலைப்பளுவின் காரணமாக மனதில் அழுத்தம் அதிகரித்து, அதனால் மூளை சரியாக எதையும் ஞாபத்தில் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. எந்த ஒரு முக்கியமான வேலையை செய்ய நினைத்தாலும், அதனை உடனே மறந்துவிடுவர். இவை அனைத்திற்கும் சரியான உணவுகளை சாப்பிடாததும் ஒரு காரணம். எனவே ஞாபக சக்தியை அதிகரிக்கவும், மூளையை சுறுசுறுப்புடனும் வைத்துக் கொள்ள உதவும் உணவுகளை சரியாக சாப்பிட்டு வந்தால், ஞாபக சக்தியை அதிகரிக்கலாம். அதிலும் அத்தகைய உணவுகளை தினமும் சாப்பிடுவது போர் தான். இருப்பினும் அவற்றை சாப்பிட்டால், நிச்சயம் மூளையின் செயல்பாட்டை அதிகரிப்பதோடு, உடலையும் ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ளலாம். சரி இப்போது அத்தகைய ஞாபக சக்தியை அதிகரிக்கும் உணவுகளைப் பார்ப்போமா!!!

மீன்- மீனில் ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் அதிகம் உள்ளது. இந்த ஃபேட்டி ஆசிட் இதயத்திற்கு மட்டுமின்றி, மூளையின் செயல்பாட்டிற்கும் சிறந்தது. ஏனெனில் மூளையின் செயல்பாட்டிற்கு ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் மிகவும் முக்கியமானது. மேலும இது மூளைச் செல்களின் இயக்கத்தை அதிகரிக்கும். அதிலும் குறிப்பாக ஹெர்ரிங், சால்மன், தூரை (Tuna), கானாங்கெளுத்தி, பொத்தல், நெத்தலி, மற்றும் மத்தி போன்றவை மிகவும் சிறந்தது.

க்ரீன் டீ- க்ரீன் டீயில் மூளைச் செல்கள் பாதிப்படையாமல் தடுக்கும், ஃபாலிபீனால் என்னும் சக்தி வாய்ந்த ஆன்டி-ஆக்ஸிடன்ட் உள்ளது. எனவே இதனை குடிப்பதால் ஞாபக சக்தி அதிகரிப்பதோடு, சோர்வான மனநிலை மாறும்.

பெர்ரிஸ்- பெர்ரிப் பழங்களில் குவர்செடின் என்னும் மூளைச் செல்களில் இயக்கத்தை அதிகரிக்கும் பொருள் உள்ளது. அதுமட்டுமின்றி இதில் ஆந்தோசையனின் என்னும் ஃபோட்டோ கெமிக்கல், அல்சீமியர் என்னும் ஞாபக மறதி நோயை தடுக்கும். அதிலும் சில பெர்ரிப் பழங்களான ராஸ்ப்பெர்ரி, ப்ளூபெர்ரி போன்றவை மிகவும் சிறந்தது.

பச்சை இலைக் காய்கறிகள்- பொதுவாக கீரைகள், காய்கறிகள் போன்றவற்றை அதிகம் சாப்பிட்டால், ஞாபக சக்தி அதிகரிக்கும் என்று முன்னோர்கள் சொல்வார்கள். அவர்கள் சொன்னது பொய்யல்ல உண்மை தான். அதிலும் பசலைக் கீரை, லெட்யூஸ், ப்ராக்கோலி, காலிஃப்ளவர் மற்றும் ஸ்புரூட்ஸ் போன்றவற்றில் ஞாபக சக்தியை அதிகரிக்கும் பொருள் இருப்பதோடு, வைட்டமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் அதிகம் இருப்பதால், உடலும் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

தேன்- தேனில் அளவற்ற நன்மைகள் அடங்கியுள்ளன. அவற்றில் ஞாபக சக்தியை அதிகரிப்பதும் ஒன்று. எனவே தினமும் காலையில் எழுந்து ஒரு ஸ்பூன் தேனை சாப்பிட்டால், எடை குறைவதோடு, ஞாபக சக்தியும் அதிகரிக்கும்


நட்ஸ்- நட்ஸில் மூளையின் சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் ஈ மற்றும் பி6 இருக்கிறது. எனவே தினமும் ஒரு கை பாதாம், பிஸ்தா போன்றவற்றை சாப்பிடுவது, ஞாபக சக்திக்கு மட்டுமின்றி, முழு உடலுக்கும் நல்லது.

பால் பொருட்கள்- பால் பொருட்களில் கால்சியம் அதிகம் உள்ளது. எனவே இந்த பொருட்களை சாப்பிட்டால், மூளைச் செல்கள் நன்கு செயல்படும். முக்கியமாக தயிரில் அமினோ ஆசிட் தைரோசின் என்னும் ஞாபக சக்தியை அதிகரிக்கும் பொருள் உள்ளது.

தண்ணீர்- மூளையில் நான்கில் மூன்று பங்கு தண்ணீர் தான் உள்ளது. எனவே தண்ணீர் குறைவானால் மூளையில் செயல்பாடும் குறைந்து, மூளையில் வறட்சி ஏற்பட்டு ஞாபக சக்தியும் குறைந்துவிடும். எனவே அதிகப்படியான தண்ணீர் குடிப்பதால், மூளையில் வறட்சி ஏற்படாமல், மூளைச் செல்கள் சுறுசுறுப்போடு செயல்படும்.

ஒயின்- நிறைய பேர் ஆல்கஹால் பருவதற்கு தடை சொல்வார்கள். ஆனால் ஆல்கஹால் குடிப்பதால், மூளையின் செயல்பாடு அதிகரிக்கும். அதிலும் ரெட் ஒயின் தான் மிகவும் சிறந்தது. ஆகவே இதனை குடிப்பதால், மூளைக்கு இரத்த ஓட்டம் சீராக இருந்து. அல்சீமியர் நோய் ஏற்படுவதை தடுக்கும். மேலும் ரெட் ஒயின் மூளைக்கு மட்டுமின்றி, இதயத்திற்கும் நல்லது.

ரோஸ்மேரி- ரோஸ்மேரி சாலட் மற்றும் டாப்பிங்கில் அலங்கரிப்பதற்கு மட்டும் பயன்படுவதில்லை. அவை மூளையின் இயக்கத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த ரோஸ்மேரியில் மூளையின் வளர்ச்சியை அதிகரிக்கும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் இருக்கின்றன.


HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife /Future Realty Inc.,
Brokerage, Independently Owned And Operated
வானுயர வீட்டுக்கனவினையும்- உங்கள்
வருமானத்திற்குள் வசப்படுத்தியும் தருபவர்.
Jambo Visvalingam
Sales Representative
Call: 416.856.1269
jambov10@gmail.com
REALTOR
MULTIPLE LISTING SERVICE
Bus: 905.201.9977 | 205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8 | Fax: 905.201.9229

ஆய்வுக் கட்டுரை

ஜெனிவா களம்: தமிழ்த் தரப்பு வரலாற்றைக் கோட்டைவிட்டுள்ளதா?

முத்துக்குமார்

ஜெனிவாவில் நடைபெற இருக்கும் மனித உரிமைக் கவுன்சில் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான விசாரணையை அமெரிக்கா கொண்டு வருவது நிச்சயமாகிவிட்டது இலங்கைக்கு வந்த அமெரிக்க இராஜதந்திரக்குழு இலங்கையில் வைத்தே அதனைக் கூறிவிட்டது பொறுப்புக்கூறல் பற்றியே பிரேரணையில் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப் பிரேரணை மூலம் மேலும் ஒரு வருடம் காலஅவகாசம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவே செய்திகள் வருகின்றன இலங்கை, சீனா பக்கம் சரிந்துவிடும் என்ற அச்சம் தான் இந்த மென்மையான அணுகுமுறைக்குக் காரணம். அமெரிக்க இராஜதந்திரக் குழுவினர் தமக்கு நெருக்கமானவர்களிடம் இத் தகவலை நேரடியாகவே கூறியிருக்கின்றனர்.

போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை தேவை என அமெரிக்க செனட்டர்கள் இருவர் கோரிக்கை விடுத்த போதும் விசாரணையில் இது அடங்கும் எனக் கூறுவதற்கில்லை நல்லிணக்க முயற்சிகளும் பெரிதாக இல்லை. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் வடமாகாணசபைத் தேர்தலை நடாத்துவதைத்தான் நல்லிணக்கம் எனக் கருதுவது போலத் தெரிகின்றது. தற்போது தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பச்சை ஆக்கிரமிப்பைத் தடுப்பது பற்றிய ஏற்பாடுகள் விசாரணையில் வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த்தரப்பு குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது விடயத்தில் அழுத்தங்களை கொடுக்காதனால் அது எதுவும் செய்யவில்லை.

இந்தத் தடவை ஷிராணி பண்டாரநாயக்கா விவகாரம் அமெரிக்காவிற்கு போனஸாக கிடைத்திருப்பதனால் சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைப் பாதுகாப்பு, நீதித்துறைச் சுதந்திரம் போன்ற விடயங்கள் பிரேரணையில் அடங்கலாம். இந்த விவகாரம் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுத் தளத்தில் சிறிய வெடிப்பை உருவாக்கியுள்ளமையினால் இதனை மேலும் அகலப்படுத்த அமெரிக்கா விரும்பலாம். அமெரிக்கா பிரேரணை விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தை எப்படியாவது வளைக்க விரும்புகின்றதே ஒழிய முறிக்க விரும்பவில்லை. சீன அச்சத்திற்கு அப்பால் மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கத்தினை முறிப்பதால் பல சங்கடங்கள் வரலாம் என்றும் அமெரிக்கா கருதுகின்றது முறித்தால் தமிழ்த் தேசத்தினை அங்கீகரிக்கவேண்டி ஏற்படும். அவ்வாறு அங்கீகரித்தால் சிங்களதேசம் முழுமையான பகையாளியாகிவிடும். அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தங்களது நலன்களைப் பாதுகாக்க முழு இலங்கைத்தீவுமே தேவை. இதனால் கூடியவரை தமிழர் விவகாரம் என்கின்ற கருவியைப் பயன்படுத்தி வளைப்பதிலேயே கவனம் செலுத்தும்.

இந்தியாவிற்கு இந்தத் தடவையும் பல சங்கடங்கள் உண்டு. அது உள்ளூர இலங்கையை பாதுகாக்கவே விரும்புகின்றது. ஆனால் அடுத்தவருடம் இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் வருகின்ற நிலையில் தமிழகத்தின் அபிலாஷைகளை புறம்தள்ள தயங்குகின்றது. இலங்கையை ஆதரித்தால் ஏற்கனவே தமிழகத்தில் கந்தலாகியிருக்கும் காங்கிரஸ் கட்சி மேலும் கந்தலாகிவிடும். கூட்டணியிலிருந்து தி.மு.க மெல்லக் கழரப் பார்க்கும். இந்தத்தடவை காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பு மிகக்குறைவாக இருப்பதனால், தி.மு.கவிற்கு காங்கிரஸ் கூட்டணியிலிருந்து கழரும் நோக்கமும் உண்டு. தி.மு.க காங்கிரஸோடு தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு பிரதான காரணம் ஸ்பெக்ரம் ஊழல் வழக்குத்தான். ஆட்சிக்கு வரக்கூடிய கட்சிகளுடன் உறவினை வைத்திருந்தால்தான் வழக்கிற்கு முகம் கொடுப்பது இலகுவாக இருக்கும்.

தி.மு.க பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவேண்டும் எனக் கூறியுள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைமைக்கும் மகஜர் கொடுத்துள்ளது. இது விடயத்தில் பல மாங்காய்களை விழுத்தவே தி.மு.க முனைகின்றது. தேர்தலில் ஈழத்தமிழர் ஆதரவு வாக்குகளை எப்படியாவது பெறுதல் வேண்டும். அதற்கு ஜெயலலிதாவை விட ஈழத்தமிழர்மீது தான் அதிக அக்கறையாக இருக்கின்றேன் என்பதைக் காட்டவேண்டும். இரண்டாவது, தமிழ்நாட்டில் தனது தலைமையில்தான் கூட்டணி என்ற மரபினை மீறி விஜயகாந்தின் தே.மு தி.கழகத்துடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் தலைமை முயன்று வருகின்றது. காங்கிஸின் இந்த குறுக்கு வழி ஓட்டத்தை தடுத்து நிறுத்தவேண்டும். இதற்கு காங்கிரஸ் தலைமையை கொஞ்சம் தட்டி வைக்கவேண்டும். மூன்றாவது, காங்கிரஸின் செல்வாக்கு தொடர்ந்து சரியுமானால் காங்கிரஸிடமிருந்து கழரவேண்டும். அவ்வாறு கழருவதால் வெளியில் கூறக்கூடிய துரும்பு இருக்கவேண்டும். ஜெனிவா விவகாரம் இவையெல்லாவற்றுக்கும் ஒரு நல்ல துரும்பாக இருக்கின்றது

வைகோவின் ம தி.மு.க அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு நிலை எடுக்கவேண்டும் என பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன் தமிழ்மக்கள் இலங்கை அரசுடன் இணைந்திருக்க விரும்புகின்றார்களா இல்லையா என்பது தொடர்பாக அவர்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த வாக்கெடுப்பில் தாயகத் தமிழர்கள் மட்டுமல்ல புலம்பெயர் தமிழர்களும் வாக்களிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும் என்றும் கூறியுள்ளது.

ஜெயலலிதா இதுவரை பிரேரணை பற்றி எதுவும் கூறவில்லை. ஜெயலலிதா வெறும் கருத்துக்களாக கூறாமல் சட்டசபையின் காட்டமான தீர்மானங்களாக தனது கருத்துக்களை நிறைவேற்றுவார். அந்தத் தீர்மானங்களுக்கு எப்போதும் இரண்டு இலக்குகள் இருக்கும். ஒன்று தமிழ் உணர்வாளர்களை தனதுபக்கத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பது இரண்டாவது கருணாநிதிக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் பல சங்கடங்களைக் கொடுக்கின்ற, அவர்களது பிரச்சாரங்களைப் பலவீனப்படுத்துகின்ற வலுவான தீர்மானங்களாக அவை இருப்பது. ஏற்கனவே ஜெயலலிதா நிறைவேற்றிய இரண்டு தீர்மானங்கள் தொடர்பாக காங்கிரசும், தி.மு.க வும் ஆடிப்போயுள்ளது. ஒன்று, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்ற தீர்மானம். இந்தத் தீர்மானத்தை தி.மு.கவோ, காங்கிரஸோ ஒருபோதும் எடுக்கமுடியாது. தி.மு.கவிற்கு எடுக்கமுடியுமாயினும் காங்கிரஸ் தலைமைக்கு சங்கடங்கள் வருவதை அது விரும்பாது. காங்கிரஸ் இத்தீர்மானத்தை எடுப்பதாயின் இலங்கை தொடர்பான அதன் வெளியுறவுக் கொள்கை முழுமையாக மாற்றமடைய வேண்டும் அத்தோடு இலங்கையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலும் பாதிப்புக்களை சம்பாதிக்கவேண்டிவரும். தமிழக ஆளுநர் ரோசையா அண்மையில் பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை மீண்டும் நினைவூட்டியிருக்கின்றார். இங்கு ஜெயலலிதாவின் விருப்பத்தையே அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இரண்டாவது, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இலங்கைப் படைகளுக்கு பயிற்சி வழங்கக்கூடாது என்ற தீர்மானமாகும். காங்கிரஸ் இது விடயத்தில் தமிழ்நாட்டை தவிர்த்து ஏனைய மாநிலங்களில் பயிற்சிகளை வழங்கவே விரும்புகின்றது. நடைமுறையிலும் அதனை மேற்கொள்கின்றது. இந்த இரண்டு தீர்மானங்களும் தமிழக மக்களை பொறுத்தவரை உணர்வுபூர்வமான தீர்மானங்கள். தமிழக மக்கள் இலங்கை இராணுவத்தை தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி கொலைசெய்த கொலைகார இராணுவமாவே பார்க்கின்றனர். இதனால் இந்தியாவின் எந்த இடத்திலும் அவர்களுக்கு பயிற்சி வழங்கக் கூடாது என்பது அவர்களது பொதுக்கருத்தாக உள்ளது. இதைவிட நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இலங்கையை எந்தவிதத்திலாவது தண்டிக்க வேண்டுமென்றும் விரும்புகின்றனர். இதனால் ஜெயலலிதாவின் பொருளாதாரத்தடை தொடர்பான தீர்மானத்தையும் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றனர். அமெரிக்காவின் ஜெனிவா பிரேரணை வந்த பின்னர் மேலும் அதிரடித் தீர்மானங்களை ஜெயலலிதா அறிவிக்கக்கூடும். நிச்சயமாக அந்தத் தீர்மானங்கள் கருணாநிதியின் தீர்மானங்களை விட உயர்ந்ததாகவே இருக்கும். கருணாநிதி சற்றுப் புத்திசாலித்தனமாக இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். ஜெயலலிதா இதனையும் விட உயர்ந்த வகையில் தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஐக்கியநாடுகள் சபை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கலாம். ஏற்கனவே ஜேர்மனியில் கூடிய தாயக அரசியல் சக்திகளும் புலம்பெயர் சக்திகளும் 'ஆர் 2 பீ ' என்கின்ற ' பாதுகாப்பதற்கான பொறுப்பு' கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கான பொறுப்பினை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஜெயலலிதாவும் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றக்கூடும். ஜெயலலிதாவின் தீர்மானம் தமிழ்நாடு சட்டசபைத் தீர்மானமாக வரக்கூடிய நிலை இருப்பதனால் அதன் பெறுமதி கருணாநிதியின் தீர்மானங்களை விட அதிகமானதாகவே இருக்கும்.

இன்று தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் விவகாரம் வாக்குவங்கியில் பாதிப்புச் செலுத்தும் விவகாரமாக மாறியுள்ளது. இதனால் ஜெயலலிதாவும் கருணாநிதியும் போட்டிபோட்டுக் கொண்டு ஈழத் தமிழர் விவகாரத்தை உயர்த்திப் பிடிக்கவே முனைவர். அதிலும் கருணாநிதிக்குள்ள பெருங்கவலை ஈழத்தமிழர் ஆதரவு அரசியல் தளம் தன்னிடமிருந்து ஜெயலலிதாவின் கைக்கு மாறிவிட்டது என்பதே! அவர் எப்பாடுபட்டாவது அதனை மீண்டும் பறித்தெடுக்க முயல்கின்றார். ரெசோ அமைப்புக்கு புத்துயிரூட்டும் முயற்சி இதன் அடிப்படையில்தான் எழுந்தது. புலிகளின் வீழ்ச்சி தன்னை பாதாளத்தில் கொண்டு போய் வீழ்த்தும் என கருணாநிதி முன்னர் நினைத்திருக்க வாய்ப்பில்லை

இந்தியாவிற்குள்ள இரண்டாவது சங்கடம் அமெரிக்கா பிரேரணையைக் கொண்டு வருவதால் அதனை நிராகரிக்க முடியாது என்பதாகும். சென்றதடவை இந்தியா ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ்நாட்டு அழுத்தம் என்பதற்கு அப்பால் இதுவும் ஒரு காரணமாக இருந்தது. இன்று இந்தியாவின் சர்வதேசக் கூட்டாளியும், பிராந்திய கூட்டாளியும் அமெரிக்காதான் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தலையும், பாகிஸ்தானின் அச்சுறுத்தலையும் சமாளிக்க அமெரிக்காவையே இந்தியா நம்பியிருக்கின்றது எனவே அமெரிக்காவை நிராகரித்துவிட்டு தற்போதைய சூழலில் இந்தியாவினால் தனது இருப்பைப் பாதுகாக்க முடியாது. இதைவிட ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் பெறும் இலக்கும் இந்தியாவிற்கு உண்டு இதற்கும் அமெரிக்காவின் ஆதரவு தேவை. எனவே இந்தியாவினால் அமெரிக்காவின் பிரேரணையை நிராகரிக்க முடியாது. ஆனால் பிரேரணையின் வீரியத்தை இயன்றளவு குறைக்கப் பார்க்கும். சென்ற தடவையும் அதனையே மேற்கொண்டது. இந்தத் தடவையும் அதற்கு முயற்சி செய்யலாம். ஏற்கனவே இலங்கை வெளிநாட்டமைச்சர் பீரிஸ் இந்தியாவிடம் ஆதரவு கேட்டிருக்கின்றார். 13வது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் கேட்டிருக்கிறார். திவிநெகும சட்டத்தின் பின்னர் 13வது திருத்தத்தில் எதுவுமில்லை என்பது வேறுகதை. இந்தியா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாகவே வெளிநாட்டமைச்சரிடம் கூறியுள்ளது. இதன்போது பிரேரணையின் வீரியத்தை குறைக்க ஆவனசெய்வேன் எனக் கூறியிருக்கலாம்.

சர்வதேச அழுத்தங்கள் எல்லாம் இந்தியாவைத் தாண்டி வருகின்றபோது வீரியக்குறைப்புக்கு உள்ளாகுவது தொடர்கதையாக உள்ளது. ஜெனிவாவில் இருக்கும் அமெரிக்கப் பிரநிதிகள் இதனை நேரடியாகவே சிலருக்கு கூறியிருக்கின்றனர். 'வலுவான அழுத்தங்களைக் கொடுக்க இந்தியா விடுகுதில்லையே' என அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இந்தியா மேற்கொள்ளும் இத்தொடர்கதையை எப்படியாவது நாம் நிறுத்தியாக வேண்டும். சில பத்தி எழுத்தாளர்கள் இந்தியா இப்படித்தான் செய்யும், நாம் பணிந்து போகவேண்டும் என போதனை செய்யப் பார்க்கின்றனர். அவர்கள் இந்தியாவின் இலங்கை தொடர்பான வெளிநாட்டுக் கொள்கையை என்றைக்குமே மாறாத பைபிள் போன்றே கருதுகின்றனர். சமூக விஞ்ஞானத்தின் இயங்கியல் தன்மையை மறுக்கின்றனர். இயங்கியல் கோட்பாட்டின்படி சூழ்நிலைக்கேற்ப மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை மாற்றங்களுக்கு இடைவிடாத அழுத்தம் முக்கியம். முன்னர் இலங்கை விடயத்தில் அணைத்தலை மட்டும் மேற்கொண்ட இந்திய அரசு, கடந்த ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் அழுத்தங்களுடன் கூடிய அணைத்தலை மேற்கொள்கின்றது. இது முக்கியமான மாற்றமே. எதிர்காலத்தில் இம்மாற்றங்கள் மேலும் அதிகரிக்கலாம். இதற்கு முக்கிய கருவியாக தமிழகமே இருக்கும் இந்திய மத்திய அரசாங்கம் என்பது மாநிலக் கட்சிகளையும் இணைத்த அரசாங்கமாக இருப்பது இன்று பொதுவிதியாகிவிட்டது இந்தப் பன்மைத்தன்மை அழுத்தங்களுக்கான கதவுகளை நன்றாகவே திறந்துவிடும். இந்திய ஆய்வாளர்கள் பலர் இனிவருங்காலங்களில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாநிலங்கள் முக்கிய பங்குவகிக்கும் எனக்கூறத் தொடங்கிவிட்டனர்.

எனவே தமிழ்த்தேசிய அரசியலுக்கான ஒரு பகுதி வேலைத்திட்டம் இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் காத்திருக்கின்றது. இந்தவேலைத்திட்டத்தை நகர்த்துவதற்கு தமிழ்த்தேசிய அரசியல் இயக்கம் ஒரு சுயாதீனமாக இயக்கமாக இருக்கவேண்டும். இந்திய மத்திய அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்று எடுபிடிகளைப்போல இருக்கின்ற அமைப்பினால் இந்தப் பணியைச் செய்யமுடியாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலவீனம் இங்குதான் மிகவெளிச்சமாகத் தெரிகின்றது. அது இந்திய மத்தியரசின் ஒரு எடுபிடி அமைப்பு. இதனால்த்தான் கூட்டமைப்பின் தலைமைகள் இதுவரை ஜெயலலிதாவைச் சந்திக்கவில்லை. வல்லரசுகள் தங்கள் நலன்களிலிருந்துதான் நிகழ்ச்சிநிரல்களை நகர்த்தும் என்பது உண்மையே அந்த நிகழ்ச்சிநிரலுக்குள் தமிழ்மக்களின் அபிலாஷைகளையும் இணைப்பதில்தான் தமிழரசியலின் கெட்டித்தனம் தங்கியுள்ளது எனது முன்னைய கட்டுரைகளில் கூறியதைப் போல வல்லரசுகளின் நிகழ்ச்சிநிரலுக்குப் பின்னால் இழுபட்டுச் செல்வதற்கு ஒரு தலைமை தேவையில்லை. அது வெறும் அடிமைக்கூட்டங்கள் செய்கின்றவேலை. ஜெனிவா வரலாற்று ரீதியாக தமிழ்த்தரப்பிற்கு ஒரு வலுவான தளத்தைக் கொடுத்திருக்கின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக அங்கு தமிழர்களது நலன்கள் பெரிதாக பேசுபொருளாகவில்லை. மாறாக வல்லரசுகளின் நலன்களே கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

சிறிலங்கா செய்திகள்

தமிழர்களுக்கு இந்தியா செய்த பழி தீர ஐ.நாவில் தோஷ நிவாரணம் செய்ய வேண்டும்



பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை படையினர் தடுத்து வைத்திருந்த பின்னர் சுட்டுக் கொன்றனர் என்பது தொடர்பான ஆதாரங்களை சனல் 4 வெளியிட்டதை அடுத்து இந்திய நாடாளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டுள்ளது. சிறுவன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது தொடர்பான காட்சிகளை சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்டதும் அதன் தாக்கம் இந்திய தேசத்திலேயே அதிகமாக பிரதிபலிப்பதைக் காணமுடியும்.

பாலச்சந்திரன் கொல்லப்பட்ட காட்சி மட்டுமன்றி வன்னிப் போர் நிலைமைகளை சனல் 4 வெளியிட்ட போதெல்லாம் இந்திய தேசத்தில், இலங்கை அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுந்ததை மறுக்க முடியாது. இலங்கையில் நடந்த சம்பவங்களுக்கு இலங்கையில் அல்லவா எதிர்ப்பு ஏற்பட வேண்டும்? ஆனால் இந்தியாவில் அல்லவா குழப்பம் ஏற்படுகின்றது. இதுபற்றி யாரேனும் சிந்தித்தால் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் வகிபாகம் எத்தன்மையது என்பது உணரப்படும். பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்ட விடயங்களை சனல் 4 வெளியிட்டதை அடுத்து இந்திய நாடாளுமன்றக் கூட்டத் தொடரைக் கூட்ட முடியவில்லை எனில் இதனை யாரும் சாதாரண விடயமாகக் கருதிவிடக் கூடாது.

ஆம்! வன்னிப் போரில் இலங்கை அரசுக்கு உதவி வழங்கிய இந்திய மத்திய அரசு, தான் செய்தது பெரும் பிழை என்பதை உணரவைக்கின்ற சம்பவங்கள் இப்போது ஆரம்பமாகிவிட்டது. இதற்கு முடிவு கட்டவேண்டுமாயின், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதே இந்தியாவுக்கான ஒரே வழியாக இருக்கும். எனினும் இந்தியா உத்தரவிட்டால் இலங்கை செய்யும் என்ற சூழ்நிலை இப்போது இல்லை என்றாகிவிட்டது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட உறவு என்பது ஈழத் தமிழர்களுக்காக இந்தியா கதைப்பதை தடுப்பதற்காக இலங்கை அரசு கையாளும் மாற்றுவழியாகும். எனவே தமிழர்களுக்கு தீர்வைக் கொடு என்று சொல்லக் கூடிய வல்லமையைப் பறிகொடுத்த இந்தியா தனது நாட்டில் குழப்பம் ஏற்படுவதற்கும் வழியமைத்துவிட்டது. ஆக வன்னிப் போருக்கான உதவியை இந்தியா செய்ததன் காரணமாக தனது பகை நாடான சீனாவுடன் இலங்கை உறவு கொள்வதற்கும் கூடவே இந்திய தேசத்தின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும் இந்தியா நடந்து கொண்டது. இத் தீவினைப் பயன் கங்கையிலோ காசியிலோ நீராடித் தீரப்போவதில்லை. மாறாக ஐ.நாவில் வைத்து மகா தோ நிவாரணம் செய்வதே இந்தியாவுக்கான ஒரே வழி

இன்றும் கொடூரன் ஹிட்லர்-ராயபட்சே உருவில்



அந்தப் புகைப்படத்தைப் பார்க்கும் யாருக்கும் மனம் உடைந்துபோகும். அவர்கள் மனிதர்களாக இருந்தால், மனித நீதியின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அந்த நீசத்தனத்தை செய்த கொலைகாரர்களின் முகத்தில் காறித் துப்புவார்கள். நாகரிக சமூகம் இதுவரை உருவாக்கிய அத்தனை யுத்த நியதிகளையும் எந்தத் தயக்கமும் இன்றி மீறிய கொலைகாரர்களின் குற்றத்திற்கு இன்னொரு இரத்த சாட்சியம்தான் அந்தப் புகைப்படங்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 13 வயது மகன் பாலச்சந்திரன் இறுதி யுத்தத்தின் போது கொடூரமாகக் கொல்லப்பட்டு கிடக்கும் புகைப்படங்களை லண்டனின் சனல்-4 தொலைக்காட்சி சென்ற ஆண்டு வெளியிட்ட போது உலகெங்கும் உள்ள தமிழர்களும் மனித உரிமையாளர்களும் ஜனநாயக சக்திகளும் உறைந்து போனார்கள். ஆனால் இலங்கை அரசு வழக்கம் போல நாடகமாடியது. பாலச்சந்திரன் தங்கள் பிடியில் இருந்த போது கொல்லப்படவில்லை. யுத்தத்தில் மாட்டிக்கொண்டு இறந்து போயிருக்கலாம் என்று சாதித்து வந்தது. தான் இழைத்த ஒவ்வொரு போர்க்குற்றம் தொடர்பாகவும் இதே பொய்யைத்தான் அது தொடர்ந்து சொல்லி வந்திருக்கிறது.

பாலச்சந்திரன் மணல் மூட்டைகளுக்கு நடுவே சட்டையில்லாமல் ஒரு லுங்கியை தோளில் போட்டுக் கொண்டு எதையோ கொறித்தபடி அமர்ந்திருக்கிறான். அந்த கண்களில் மரண பயம் இல்லை. ஏதோ திருவிழாவில் காணாமல் போன குழந்தையைப் போல குழப்பத்துடன் இருக்கிறது அவனது முகம். இன்னொரு படத்தில் யாரையோ எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கிறான். மூன்றாவது படத்தில் குண்டடியுடன் பிணமாகக் கிடக்கிறான். இந்தப் படம் ஏற்கனவே வெளிவந்ததுதான். ஆனால் பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முந்தைய அந்த இரண்டு படங்களும்தான் அவன் மேல் நிகழ்த்தப்பட்ட பச்சை இரத்தப் படுகொலையினை இந்த உலகத்திற்கு உரத்து அறிவிக்கின்றன. அந்தப் பாலகன் பிடிக்கப்பட்டு மறைவிடத்தில் வைத்திருந்து பிஸ்கட்டும் தண்ணீரும் கொடுத்து பிறகு அருகில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான்.

சனல்-4 தொலைக்காட்சியில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான ""சாட்சிகளற்ற போர் : இலங்கையின் கொலைக்களங்கள்''என்ற ஆவணப்படத்தை சென்ற ஆண்டு வெளியிட்ட கெலம் மெக்ரே அடுத்த மாதம் வெளியிட

மகிந்த சமரசிங்க கழற்றி விடப்பட்டுள்ளார்?



ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 22வது கூட்டத்தொடரில் பங்கேற்கும் குழுவில் இருந்து, மனிதஉரிமை விவகாரங்களுக்கான சிறிலங்கா அதிபரின் சிறப்புத் தூதுவரான, அமைச்சர் மகிந்த சமரசிங்க கழற்றி விடப்பட்டுள்ளார். கடந்த பல ஆண்டுகளாக ஜெனிவா கூட்டத்தொடர்களில் சிறிலங்கா குழுவுக்குத் தலைமை தாங்கி வந்த, அமைச்சர் மகிந்த சமரசிங்க, சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவின் உத்தரவின் பேரிலேயே, இம்முறை ஜெனிவா செல்லும் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜெனிவாவுக்கான சிறிலங்கா தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தலைமையில், வெளிவிவகார அமைச்சு, சட்டமாஅதிபர் திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழுவே இம்முறை ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்கவுள்ளது. தாம் ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க, அது பற்றி மேலதிக கருத்து எதையும் தெரிவிக்க மறுத்துள்ளார்.

மகிந்த சமரசிங்க நீக்கப்பட்டுள்ள விவகாரம் குறித்தோ, அமைச்சர்கள் எவரும் ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனரா என்பது குறித்தோ கருத்து எதையும் வெளியிட சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது. மனிதஉரிமைகள் விவகாரங்களுக்கான சிறிலங்கா அதிபரின் தூதுவர் பொறுப்பில் இருந்து சிறிலங்கா அமைச்சர் மகிந்த சமரசிங்க, நிரந்தரமாகவே நீக்கப்பட்டு விட்டாரா என்பது குறித்தும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு கருத்து வெளியிட மறுத்துள்ளது. அதேவேளை, சிறிலங்கா வெளிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்பாரா இல்லையா என்பது குறித்து இன்று முடிவு செய்யப்படும் என்றும், ஜெனிவா செல்லும் குழு உறுப்பினர்களும் இன்று தெரிவு செய்யப்படுவர் என்றும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு சிறிலங்காவின் நிலைப்பாட்டை விளக்குவதற்கு, சிறிலங்கா வெளிவிவகார அமைச்சினால் இன்று கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். இதற்கிடையே, ஜெனிவாவில் உள்ள சிறிலங்காவின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அவசர கலந்துரையாடலுக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். இன்று சிறிலங்கா வரும் அவர், இரண்டு நாட்களுக்கு கொழும்பில் தங்கியிருந்து, வெளிவிவகார அமைச்சு மற்றும் சிறிலங்கா அரசின் மூத்த பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் குறித்து ஆலோசனைகளில் ஈடுபடவுள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22வது கூட்டத்தொடருக்கு சிறிலங்காவின் சார்பில் ரவிநாத் ஆரியசிங்கவே தலைமை தாங்கவுள்ளார். இவரது தலைமையிலான குழுவில், சட்டமாஅதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த 5 சட்டவாளர்கள், நீதி அமைச்சின் செயலர், பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஆகியோர் அங்கம் வகிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன இந்தக் குழுவைச் சேர்ந்த சிலர் ஏற்கனவே ஜெனிவா சென்று அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


J&J Swagat
Convention
Centre
J & J SWAGAT
BANQUET HALL
Tel: 905-475-5870
Tel: 905-475-3900
Fax: 905-475-2475
info@jandjswagat.com
415 Hood Road, Unit #22
Markham ON, L3R 3W2
J&J Best Western
Banquet Hall
Tel: 416-759-4000
Tel: 416-508-2433
jjbestwestbanquet@gmail.com
1468 Victoria Park Ave
Unit #1B, North York M4A 2M2
Scan Me

கவிதாமேடு!



கனவான உறக்கங்கள் கலைவதெப்போ?

எழுதுங்கள் எம் இதயதாபம் எங்கும்
எரிகிறது விடுதலையின் தீபம் எம்
இனத்திற்கு யாரிட்டார் சாபம் நாம்
ஏதிலிகளாய் அலையும் காலம்

நீல வானத்தில் நிர்மலமாய் அமைதி அங்கு
கானங்கள் பாடுது பார் குருவி இச்
சிலுவைகளோ அடையாளச் சுருதிஅங்கு
சிந்துதுபார் செந்தமிழன் குருதி

எம் காதாரம் ரீங்காரம் பாடும் சில
வண்டுகளின் ஓங்கார ஓசை அங்கு
தூரத்தில் கேட்கும் வெடியோசை எம்
துடிக்கின்ற வீரத்தின் பாசை

தணலாகக் கொதிக்கிறது நிலவும் தீக்
கனலாகச் சுடுகிறது தென்றல் அதி
காலையிலே சிந்தும் பனித் தூறல் எம்
கல்லறைக்கு அதிகாலை பூசை

எம் கனவான உறக்கங்கள் கூட விரைவில்
கலைந்து விடும் செய்திவரும் காலை இது
கணநேரம் ஓய்வெடுக்கும் வேளை ஈழக்
காற்றாக வீசிடுவோம் நாளை

எம் உயிர் பிரியும் வேளையிலும் கூட நாம்
உங்களிடம் நீட்டுகிறோம் ஆயுதம் நீர்
எழுந்திடுவீர் எழுச்சி கொண்டு ஆயிரம் இனி
எழுதிடுவீர் எத்தனையோ பாயிரம்

நிம்மதி தேடி

நிம்மதி தேடி வந்த அந்நிய தேசத்தில் என் பிழைப்பு;
என் மதி நிறைந்ததோ சொந்த மண்ணின் நினைப்பு.
மன அமைதி இழந்து நாளும் வாழ்கிறேன் வாழ்க்கை;
தாய்மண்ணின் வாசத்தை நுகரத்துடிக்கும் நெஞ்சு.

சோர்வுற்ற வேளை தந்தையின் ஆதரவும்
நோயுற்றவேளை சாய்ந்திட அன்னை மடி
பிரிந்து வாழ்வோம் என மறந்து சண்டையிட்ட
சகோதரங்களின் இனிய பாசம் இவை இழந்தேன்.

ஓலைப்பாய் நித்திரை தந்த சுகம் நினைந்து - இங்கே
பஞ்சு மெத்தையில் கூட நிம்மதியில்லா உறக்கம்.
ஓய்வுக்காய் மேலைநாட்டு மக்கள் செல்லும் தேசம்
அது எம் தாயகம் போல் மன அமைதி தரும் இடமே.
அந்நிய மண்ணில், அந்நியனாய் வாழும் நானும் -ஏங்குகிறேன்
அவ் அந்நியன் போல்; என் தாய்மண்ணில் வாழ்ந்திடவே

இடப்பெயர்வு

அவசரத்தில் அவிழ்க்காமல்
விட்டு வந்த மாடு

பூட்டிய கூட்டுக்குள்
கோழியும் , குஞ்சும்

உலையில் புட்டு
வரும்போது அரையவியல்
எரிந்துபோயிருக்கும் இப்போது

யார் சோறுவைக்கப்போகிறார்கள்
பூனைக்கும் , நாய்க்கும்

வெட்டி அடுக்கியமாதிரி
வேலிக்கான கதிகால்கள்

வாஞ்சையுடன் வளர்த்த பயிர்கள்
வாடிப்போய்விடும் பராமரிப்பில்லாமல்

பாழாய்ப்போன யுத்தம்
வீடுகூடப் பூட்டவில்லை

வாழ்ந்தவரெல்லாம் மாண்டுவிட
மிஞ்சி இருப்பது நான்மட்டும்தானே

உயிர் பிழைக்க நானும்
ஊர் பெயர்ந்தால்
வீடென்ன செய்யும்.



சொல்லிலடங்காத
சோகங்களின்
தொகுப்பு

பட்டவர் அன்றி
மற்றவர் புரிந்திடா
உணர்ச்சிகளின் குவியல்

கூரைபிளந்து
வானம் பார்த்திருக்கும்
வீடு

செடிகொடி வளர்ந்து
காடாய்க் கிடக்கும்
வளவு

குதுகலத்தோடு வாழ்ந்த
குடிதனின் நிலைகண்டு
குளமாகும் கண்கள்

அடியெடுத்துவைக்கையில்
அன்னியப்படும்
பயிர் நிலங்கள்

சிறப்பாய் வாழ்ந்த நாட்கள்
சிந்தையில்
வட்டமிட்டிட

சின்னதில் செய்திட்ட
குறும்பினைச் சொல்லிடும்
சுவர்கள்

இருப்புக்கும்
இழப்புக்குமிடையில்
அல்லல்ப்படும் மனம்

சிரிப்பும், அழுகையும்
சேர்ந்தேவரும் - ஆம்
மீள்குடியமர்வென்பது எங்களுக்கு

மரணிப்புக்கு
முன்னால் கிடைக்கும்
மறுபிறப்பு.

இப்படியும் ஒரு வாழ்க்கை

ஏக்கம்,துக்கம் ஏன் இந்த
வாழ்வென்ற விரக்தியோடு
விடிந்துகொள்கிறது பகல்

வீதி,வேலைத்தளங்கள்,
பாடசாலை,பயணத்திலெல்லாம் -விதி
எம்மீது ஒரு விழி வைத்திருக்கிறது

சந்தோசமான சடங்குகளில்கூட
எல்லோர் மனத்திலும் -தனித்துட்காந்திருக்கிறது
எதிர்காலம் பற்றிய பயம்

கண்ணயரும் போதலெல்லாம்
துப்பாக்கிச் சத்தங்கள்
விழித்திருக்கிறது இரவு.



13 ம் பக்க தொடர்ச்சி

அதே திருகோணமலையில் இன்று- அதாவது 1998 வரை குடியேறியுள்ள சிங்கள குடியேற்றங்களின் விபரத்தை பாருங்கள்.

1. ஸ்ரீமாபுர
2. அபயபுர
3. மிகந்தபுர
4. 4ம் கட்டை
5. ஆண்டான்குளம்
6. வெல்கம்காரை
7. 10 ம் கட்டை
8. மொறகிவன
9. மயில்வேவ
10. நாமல்வத்த
11. வானலை
12. கினப்பன்பேக்
13. நாலத்த
14. கமதல்சுபுர
15. குறிஞ்சாக்குளம்
16. கொறவபொத்தான
17. 6 ம் கட்டை
18. 20 ம் கட்டை
19. கமதல்புர
20. புலஸ்திபுர
21. கோவில்வத்த
22. பாரியூற்று
23. கோவில்கடவல
24. 97 99ம் கட்டை
25. சீனிஆலை
26. ஜெயந்திபுர
27. ஐயபுர
28. தெகிவத்த
29. நிலாப்பனை
30. அரிப்பு
31. கல்லாறு
32. அலிஒலுவ
33. சரசுரா
34. 1 ம் 2 ம் கொலனி
35. சிறிபுர
36. மட்கோ
37. சேருவில
38. கந்தளாய்
39. 13 ம் கட்டை
40. பன்குளம்
41. செவலபேக்
42. மண்டலபுர
43. சுமதிபுர
44. சோமபுர
45. எல் 1.பி.1.2
46. கல்மேபுயால
47. சாலியபுர
48. அக்கோபுர
49. கித்துளுத்து
50. அளுத்ஓயா
51. பொலிகண்டி
52. அடம்பன்
53. கல்லறவு
54. கிம்புள்பிட்டியாவ
55. மகாதீவுல்வேல
56. வேப்பங்குளம்
57. மல்கிபிறிப்
58. 98 ம் கட்டை
59. லங்கிறிகடவைப்பு
60. கோமரல்கலெவ
61. நிலவுக்கடவேவ
62. ஒட்டிசாக்குளம்
63. மன்மதவாச்சி
64. சிங்கபுர
65. பொக்கியாட்
66. உள்பத்து
67. நாச்சிக்குடா
68. 5 ம் கட்டை
69. 3 ம் கட்டை
70. மொறவேவா
71. சுமிதிராவகம
72. மகாவலகம
73. அல்லை
74. கொட்டுவே
75. கலகட்டுவெல
76. கோம்புகட்டுவ
77. கல்கனிவெவ
78. மோறாமை
79. பொத்தலவெவ
80. குழுக்காவெல
81. மீசஸ்வெல
82. றொட்டுவெல
83. ஆனைக்கட்டி
84. கருந்தகம
85. பெக்கிலிகடவேவ
86. தெள்ளிய
87. சமந்தபுர
88. பராக்கிரமபுர
89. கிரிச்சண்டுகாயலிகள
90. 97-92-93 ம் கட்டை

இன்னும் எத்தனையோ இன்று முளைத்துள்ளன. இந்த அத்துமீறிய குடியேற்றங்களால் அநாதரவாகியுள்ளது தமிழினமே !!!!!!

தமிழ் அடையாளங்களை அப்படியே மொழிமாற்றம் செய்து - சிங்களவர் பகுதியாக்குகின்ற நிலக்கொள்ளையை சிங்கள இனவெறியர் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர்

விழித்திடு ! எழுச்சிகொள்! போராடு!


உதாரணம் (1): திருகோணமலை மாவட்டம்

திட்டமிட்ட சிங்கள குடியேற்றமும் அதன் வளர்ச்சியும்

Table-1 - Demographic data over the years for the Trincomalee District

		Sinhalese		Tamils		Muslims	
Year	Total population	Total	%	Total	%	Total	%
1827	19158	250	1.3	15663	81.8	3245	16.9
1881	22197	935	4.2	14304	64.8	5746	25.9
1891	25745	1105	4.3	17117	66.4	6426	25.0
1901	28441	1203	4.2	17060	60.0	8258	29.0
1911	29755	1138	3.8	17233	57.9	19914	32.6
1921	34112	1501	4.4	18580	54.5	12846	37.7
1946	75926	11606	15.3	33795	44.5	23219	30.6
1953	83917	15296	18.2	37517	44.7	28616	34.1
1963	138220	40950	29.6	54050	39.1	42560	30.8
1971	188245	54744	29.1	71749	38.1	59924	31.8
1981	256790	86341	33.6	93510	36.4	74403	29.0
1987	273586	98435	36.0	97940	35.8	74756	27.3

உதாரணம் (2):



உதாரணம் (3):

Table-2 - Demographic data over the years for the Batticaloa District

		Sinhalese		Tamils		Muslims	
Year	Total population	Total	%	Total	%	Total	%
1881	105558	5012	4.8	61014	57.9	37255	35.4
1891	122699	6403	5.2	69584	56.7	44780	36.4
1901	145161	7575	5.2	79857	55.0	54190	37.3
1911	153943	5771	3.7	83948	54.5	60695	39.4
1921	158709	7243	4.6	84665	53.3	63146	39.8
1946	203186	11850	5.8	102264	50.3	85805	42.2
1953	270493	31174	11.5	130381	48.2	106706	39.2

13வது அரசியல் திருத்தம் வேண்டுமா?- மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வேண்டும்: கோத்தபாய



இலங்கை- இந்திய அரசின் ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்த வேண்டுமா, இல்லையா என அறிந்து கொள்ள மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாட்டில் பெருபான்மையான மக்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நிலையில், 13 வது அரசியலயமைப்புத் திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா அல்லது அதிகாரங்களை குறைக்க வேண்டுமா அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அரசியல் கட்சிகள், அமைப்புகள் தமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் முன்வைத்து, மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இலங்கையில் மாகாணசபை முறைமையை ஏற்படுத்திய அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை ஒழித்துவிட வேண்டும் என்று ஆளுந்தரப்பில் உள்ளவர்கள் குரல் எழுப்பி வருகின்றமை குறிப்பித்தக்கது.

கிழியும் ஜனநாயக முகமூடிகள்...?

Handed a snack, and then executed: the 12-year-old son of a Tamil Tiger



கடந்த 18ம் திகதி பிரித்தானியாவில் வெளியாகும் பிரபலிய பத்திரிகையான "இன்டிப்பென்டனில்", வெளியான மூன்று படங்கள் உலகத்தை சோகத்திலும் சிறிலங்க அரசினை அவமனத்திற்குள்ளும் ஆக்கியிருந்தன. சிறிலங்காவின் போர்குற்றம் பற்றிய உண்மைகாட்சிகளை உள்ளடக்கிய, சர்வதேச ரீதியாக இரு காணோளிகளை முன்பு வெளியிட்ட திரு கால்லாம் மாக்கரோயினால் இவை வெளியிடப்பட்டிருந்தன. இவ் நிழற்படங்களில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரனின் 12 வயது நிரம்பிய இளைய மகன், பாலகன் பாலச்சந்திரன், 2009ம் ஆண்டு மே மாதம், இறுதி யுத்தவேளையில், சிறிலங்கா இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு, இராணுவ பதுங்கு குழியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும், அதேவேளை பாலச்சந்திரன் ஏதோ ஒரு தின்பட்டத்தை உண்ணுவதையும், அதனையடுத்து பாலச்சந்திரன் மிக கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் விபரிக்கும் நிழற்படங்கள் வெளியாகியிருந்தன. இதனை பார்வையிட்ட உலகின் பண்புள்ள மனிதர்கள், சிறிலங்க அரசின் காட்டுமீராண்டித்தனமான செயலை கண்டனம் செய்தவேளையில், சிறிலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி சாரத் பொன்செக்கா, இவற்றை திசை திருப்பும் நோக்குடன,; பல வெற்று வேட்டுக்களை ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு கூறியிருந்தார். சாரத் பொன்செக்காவினுடைய முன்னைய செவ்விகள், அறிக்கைகளை நாம் அலசி ஆராய்ந்தால், 12 வயது பாலகன் பாலச்சந்திரன் இரணுவத்தினாரால் காட்டுமீராண்டித்தனமாக கொலைசெய்யப்பட்டது பற்றி பொன்செக்காவினால் கூறப்பட்டவை யாவும், கபட நோங்கங்களை அடிப்படையாக கொண்ட வேறும் வெற்று வேட்டுக்களே என்பதை காண முடிகிறது. போர் குற்றத்திலிருந்து சிறலங்கவின் ஜனதிபதி ராஜபக்சாவையும், இவ் படுகொலைக்கு பொறுப்பான குற்றவாளிகளையும், காப்பாற்றும் நோக்குடனேயே, சிறிலங்கா அரசின் எதிப்பாளர்போல் தன்னை காண்பிக்கும் சாரத் பொன்செக்க, தனது வெற்று வேட்டுக்களை வெளியிட்டுள்ளார். சாரத் பொன்செக்கா இராணுவத்திலிருந்து விலகியவேளையில், பல செவ்விகளில் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சா, இராணுவத்தின் சிரேஸ்ட அதிகாரிகள் பலரை நேரடியாக தொடர்புகொணடதாகவும், தனக்கு தெரியாமல் சிரேஸ்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகளை பிறப்பித்ததாகவும் கூறியிருந்தார்.

இப்படியான நிலைமையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் இளைய மகன், பாலகன் பாலச்சந்திரன் இரணுவத்தினரினால் கொலை செய்யப்படவில்லை என எப்படியாக சாரத் பொன்செக்காவினால் உறுதியாக கூற முடிகிறது? அத்துடன் தனது காலப்பகுதியில் இப்படியொரு சம்பவம் நடைபெறவில்லையென எப்படியாக இவரினால் அறுத்துறுத்து கூற முடியும்? இதே சாரத் பொன்செக்கா, வெள்ளை கொடியுடன் வந்த தமிழீழ விடுதலை புலிகளில் முக்கிய உறுப்பினர்களான – திரு நடேசன், கேணல் ராமேஷ், புலித்தேவன் ஆகியோh,; பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயாவின் உத்தரவின் பெயரிலேயே, சில இராணுவ அதிகாரிகள் சுட்டுக்கொன்றனரேன பொன்செக்கா கூறியதை நாம் மறந்துவிடவில்லை. சாரத் பொன்செக்கா உண்மையை கூறுபவரானால், பாலகன் பாலச்சந்திரன் இருக்கும் பதுங்கு குழி, சிறிலங்க இராணுவத்தின் பதுங்கு குழி இல்லையென இவரால் மறுக்க முடியுமா? பாலகன் பாலச்சந்திரனின் காட்டுமீராண்டித்தன கொலை பற்றி மறுதலித்து வெற்று வேட்டுக்களை முன்வைக்கும் பொன்செக்கா, எதற்காக தமது ஆங்கில அறிக்கையில், "நான் நினைக்கவில்லை........, நான் நினைக்கிறேன்........, நான் அறிந்தவரையில் என்ற வாசகங்களை இணத்;து, பாலகன் பாலச்சந்திரனின் கொலையை இராணுவம் செய்யவில்லையென உறுதியாக கூறமுடிகிறது? அரசியல் அனுபவமற்ற சாரத் பொன்செக்கா, பதவி ஆசை கொண்ட காரணத்தினால், மிக விரைவில் வெற்றிடமாகவிருக்கும், பிரதமர் பதவியை அடையும் நோக்குடனும் இவற்றை கூறியிருக்கலாம். திருகோணமலையில் இடம்பெற்ற சிறிலங்காவின் கடந்த சுதந்திர தினவிழாவில், ஜனதிபதி ராஜபக்சா தமிழ்மக்களுக்கு எந்தவித அரசியல் தீர்வையும் முன்வைக்க தேள்வையில்லை என்று கூறியதை, தமிழ்மக்களும் சர்வதேச சமூதாயமும் கவனத்தில்; கொண்டனர். இதே விடயங்களை, சாரத் பொன்செக்கா, செவ்வி ஒன்றில,; 2009ம் ஆண்டு டிசம்பர் 28ம் திகதி, கூறியிருந்ததை பலர் கவனிக்க தவறிவிட்;டனர். இதன் காரணமாகவே இவர் ஜனதிபதி வெட்பாளராக போட்டியிட்டவேளையில், தெற்கில் இவருக்கு கிடைத்த வாக்குகளுக்கு மேலான வாக்குகளை வடக்கு கிழக்கு மாகணங்களில் பெற்றிருந்தார். ஆவ் செவ்வியில், இவரினால் கூறப்பட்ட சில முக்கிய விடயங்களை இங்கு உங்கள் கவனத்திற்கு தருகிறேன் : "பதின்மூன்றவது திருத்தச் சட்டம் 20 வருடம் பழமை வாய்ந்ததுடன், இது போர் நடந்த வேளையில் உருவாக்கப்பட்டது. இப்பொழுது சமூதயங்களுக்கிடையே நல்ல புரிந்துணர்வுகள் உள்ளது. எந்தவித அவநம்பிக்கைகள் எமக்கிடையே கிடையாது. சகல சமூதாயங்களும், அமெரிக்காவில் கறுப்பு வெள்ளையின மக்கள் வாழ்வது போல் வாழமுடியும். அவர்கள் ஒரு நாடு, ஒரு தேசமென வாழ்கிறார்கள். நாங்களும் இது போல் ஒரு தேசியமாக வாழலாம்........."

சாரத் பொன்செக்காவினது ஆங்கிலச் செவ்வியை மேலும் கேட்பதற்கு கீழே அழுத்தவும். யாதார்த்தமான உண்மை என்னவெனில், தெற்கின் சிங்கள அரசியல்வாதிகளில் ஒரு சிலர் தவிர்ந்த மற்றையவர்கள்;, தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில,; ஏமாற்றி சவாரி செய்பவர்களாகவே காணப்படுகிறார்கள். இதேவேளை முன்பு சிறிலங்கா அரசுடன் இணைந்து சர்வதேசரீதியாக "சிறுபிள்ளை இராணுவம்" விடயத்தில் கூட்டாக வேலைசெய்தவர்கள்;, பாலகன் பாலச்சந்திரனின் காட்டுமீராண்டித்தன கொலையின் நிழற்படங்களை பார்த்ததும், இவர்களுடன் தான் நாம் இணைந்து முன்பு "சிறுபிள்ளை இராணுவம்" விடயத்தில் வேலைசெய்தோமா? என எண்ணி தலைகுனிந்து நிற்கின்றனர். அதேவேளை பாலகனையே இப்படி காட்டுமீராண்டித்தனமாக கொலை செய்த சிறிலங்க அரசும் இராணுவமும,; மற்றவர்களுக்கு என்ன செய்திருப்பார்கள் என்பதை யாவரும் ஊகிக்க வழிவகுத்துள்ளது.

ச. வி. கிருபாகரன்

Sri Lanka's atrocity against the Tamils is no longer in doubt

NETRIKKAN ENGLISH NEWS



Members of Toronto's Tamil community hold posters of victims of Sri Lanka's civil war as they gather for the third annual war crimes cay on May 18, 2012.
For The Globe and Mail

Sri Lanka's atrocity against the Tamils is no longer in doubt

FRANCES HARRISON


Published Monday, Feb. 25, 2013 07:00AM EST
Last updated Monday, Feb. 25, 2013 07:00AM EST

Two eyewitnesses have come forward for the first time to describe one of the most notorious war crimes of the Sri Lankan civil war in 2009. It's known as "the white flag incident" – the killing of a group of about forty Tamil Tiger political leaders who surrendered on the final day of the war.
The Sri Lankan government has always maintained that the Tamil leaders carrying the white flag were shot in the back by their own people. But this latest evidence seems to put paid to that theory.
The two witnesses, who've now separately reached the safety of London, say they saw the Tamil Tiger leaders accepted into the custody of the Sri Lankan military and escorted away from the frontline alive.
One witness, Kumaran [all names have been changed to protect the identity of the witnesses], was a former bodyguard to the Tiger political leaders. Badly injured in the last month of the war, Kumaran surrendered to the Sri Lankan military to save his life and became a reluctant informer, identifying other rebels mingling among the thousands of civilians.
On the eve of the surrender, Kumaran was driven by the Sri Lankan military to near the battlefield and then positioned behind an earthen embankment. His task was to confirm the identity of the surrendering leaders for the military; as their former bodyguard he was in a unique position to do this. To him it looked like a well-organized surrender – there were soldiers everywhere preparing for the event.
In the same area was Sharmilan, a former math teacher who'd been pressganged into service by the rebels to dig bunkers and bury the dead in the last year of the war. Sharmilan and a group of fighters and civilians had surrendered in the dark hours of the night, knowing the war was over and it was their only chance of survival. After being searched they were held in a derelict building. From this vantage point Sharmilan also watched several groups of Tiger leaders walk out of the war zone towards the Sri Lankan army. He was surprised to see the political wing leader, Nadesan, his Sinhalese wife and the head of the Peace Secretariat, Pulidevan, in the first group. Surprised because the Tigers were a group that preached martyrdom, issuing all recruits with cyanide capsules to use in case of capture. The Tiger leaders were carrying a makeshift white flag and Nadesan's wife was shouting something urgently in the language of the soldiers – probably telling them not to shoot.
Both witnesses say Sri Lankan soldiers went out to greet several groups of surrendering rebels and escorted them over a bridge across the lagoon to waiting vehicles on the other side. Sharmilan adds that he saw military vehicles and the white jeeps typically used by international aid agencies.
Kumaran waited about an hour and then the military put him in the back of a pick up truck and drove him away. Along the road he saw a group of soldiers taking photos of corpses lying on the ground on their mobile phones. As they drove past, Kumaran recognized Pulidevan and Nadesan's bodies.
"I thought if they can do this to them, what can they do to me," he recalls, adding that the hardest thing in the months ahead was not to breathe a word to anyone of what he'd seen.
It wasn't long before the Sri Lankan defence ministry website listed Pulidevan and Nadesan as among the dead. Months later a photograph appeared on websites abroad of their half naked corpses, revealing bullet wounds and burn marks on the front of the bodies. There has never been any official explanation for the injuries in these pictures which don't match the government's story that the men were shot in the back by their own people while trying to escape.

What the accounts of these two new witnesses indicate is that the surrender arrangements were an elaborate charade to lure the Tiger leaders to a squalid and undignified death. The Sri Lankan government didn't want to take prisoners – especially those who spoke English and could mobilize international attention around the world. This was a government that had just flouted almost every law on war – a United Nations report later detailed how it had committed not just war crimes but crimes against humanity. Politically it also made no sense to leave senior Tiger leaders alive ready to lead another phase of the Tamil struggle in future. The intention was to crush Tamil nationalism.

Of course when the Tiger political leaders set out that dawn to surrender they knew the risk they ran. In their final hours they sent desperate messages out to say they were coming – through the Sunday Times journalist Marie Colvin, a Tamil member of the Sri Lankan parliament, Norwegian diplomats, UN Staff, the International Red Cross and a European intermediary. As a result many top Sri Lankan politicians and officials in the capital Colombo, including the country's President, knew the surrender was about to happen.
It's time Sri Lanka came up with a better explanation for the white flag incident. Blaming it on the Tigers themselves doesn't wash. For one thing, we now knowthat in the last three days of the war the rebel leader authorized his fighters to take off their uniforms and mix with civilians to escape. The "white flag incident" was the most publicized surrender plan of the war – hardly a secret – so if the rebel chief objected he could have easily stopped it. It's unlikely a junior fighter would just take it into his head to mow down forty top leaders and their family members walking out in several clusters. Then there's the destruction of the corpses which were evidence and later the photographs that raise many questions about how these men actually died. Sceptics will say any witness who was a rebel is inherently unreliable but there are increasing numbers now surfacing. By coming forward to speak publicly about what they saw, these men who've been through traumatic events are putting themselves – and their extended families – in danger once again. Sri Lanka's atrocity against the Tamils is no longer in doubt

Liberals Urge UN Human Rights Council to Act on Situation in Sri Lanka



Posted on February 25, 2013

OTTAWA– Liberal Leader Bob Rae made the following statement today on the beginning of the 22nd regular session of the United Nations Human Rights Council:

"As we mark the opening of the UN Human Rights Council session in Geneva, it is vital that members send a clear and resounding message that the international community is prepared to hold to account those who contravene international standards, specifically the governments of Iran, North Korea, Syria and Sri Lanka.

In recent months, Sri Lanka has seen a marked deterioration in its respect for human rights and the rule of law. This is gravely disappointing for those who saw an opportunity to create a viable and strong democratic country with the end of the civil war. The Rajapaksa regime has shown no progress in implementing constructive recommendations put forward by its own Lessons Learnt and Reconciliation Commission (LLRC) or the Human Rights Council.

The international community must stand united in its efforts to hold the Sri Lankan regime accountable for its transgressions. The Liberal Party of Canada has consistently spoken out on the need for the Sri Lankan government to take meaningful and concrete action to address allegations of human rights violations and a lack of accountability.

Any resolution at the Human Rights Council on the situation in Sri Lanka must include a fixed timetable of specific steps to investigate alleged war crimes during the civil war, secure the independence of the judiciary, and invest in truth and reconciliation efforts. This must all be monitored and reported to the Human Rights Council. Finally, and under its own mandate, the Council should promptly initiate an independent and transparent investigation into the alleged violations of international humanitarian law and human rights in Sri Lanka."

COMMITMENT & CARE BEYOND THE SALE IN ALL YOUR REAL ESTATE NEEDS!

Mcowan/16th Ave

Bedrooms: 4 Markham
Washrooms: 3 $659,900

9th Line / 14th Ave

Bedrooms: 4 Markham
Washrooms:3 $609,900

Mccowan & Eglinton

Bedrooms: 2+1 Toronto
Washrooms: 2 $199,000

Finch/Morningside

Bedrooms: 4+1 Toronto
Washrooms: 4 $524,900

Steeles Ave E/Staines

Bedrooms: 4 Toronto
Washrooms: 3 $549,900

Morningside/Steels

Bedrooms: 3 Toronto
Washrooms: 3 $675,000

Mccowan/Ellesmere

Bedrooms: 2 Toronto
Washrooms: 2 $279,900

Morningside/Steeles

Bedrooms: 3+1 Toronto
Washrooms: 3 $489,900

Staines/Steeles

Bedrooms: 3 Toronto
Washrooms: 3 $519,000

Neilson/Sheppard

Bedrooms: 2 Toronto
Washrooms: 2 $107,900

Ellesmere/Morningsde

Bedrooms: 2+1 Toronto
Washrooms: 2 $134,800

Morningside / Mcnicoll

Bedrooms: 3 Toronto
Washrooms: 2 $409,000



Commitment & Care beyond the Sale In All Your Real Estate Needs!

HOMELIFE HIGHER STANDARDS

Pirabaa Nallathamby
Sales Representative

Cell: 416-399-8093
Email:nvpiraba@gmail.com

HomeLife
Future Realty Inc.,Brokerage*
7 Eastvale Drive, Unit 205, Markham, ON, L3S 4N8
Bus: 905-201-9977
Higher Standards Agents...Higher Results!